Registered as a NewsPaper

விலை ரூபா : 8.00

# ஈழநாதம்

மக்கள் நாளிதழ்

பக்கங்கள்-12+1V

நாதம் -16 திருவள்ளுவர் ஆண்டு- 2036 ஆனி-21 05-07-2005 செவ்வாய்க்கிழமை ஓசை 137



கணேசா நகையகம்

தங்கநகை உலகில் தமக்கென தனியிடம் பதித்தவர்கள்

இல:123. பஜார் வீதி. வவுனியா.
T.P.-024-2222464

இல:194. கஸ்தூரியார் வீதி. யாழ்ப்பாணம்.
T.P.-021-2225987

(சி-12149)

# தமிழீழப் பிரதேசமெங்கும் கரும்புலிகள் நாள் இன்று உணர்வெழுச்சியுடன் கடைப்பிடிப்பு

(நமது நிருபர்)

தமிழீழ தேசிய விடுதலைப்போராட்டத்தின் உன்னத தற்கொடையாளிகளை நினைவு கூரும் கரும்புலிகள் நாள் இன்று தமிழீழப் பிரதேசம் எங்கும் உணர்வெழுச்சியுடன் கடைப்பிடிக்கப்படவுள்ளது.

### கிளிநொச்சியில்...

காலை 9.00 மணிக்கு பிரதேசசபைச்செயலக வளாகத்தில் சிறப்புற அமைக்கப்பெற்ற கரும்புலி மாவீரர்களின் நினைவுப் பந்தலில் பொதுச்சுடரேற்றல்,தேசியக் கொடியேற்றல், ஈகச்சுடரேற்றல், மலர்மாலை அணிவித்து அகவணக்கம் செலுத்தி வீரவணக்க உரைகள் இடம்பெறவுள்ளன.

அதேபோன்று பிற்பகல் 4.30 மணிக்கு கிளிநொச்சி கந்தசுவாமி ஆலய முன்றலிலிருந்து பாண்ட் வாத்திய இசையுடன் கரும்புலிகளின் திருவுருவப்படம் தாங்கிய ஊர்திப் பவனியுடன் கரும்புலி மாவீரர்களின் பெற்றோர்கள் பிரதான வீதிவழியாக ஊர்வலமாக அழைத்துவரப்பட்டு கரைச்சிப் பிரதேச செயலகத்தில் அமைக்கப்பட்டுள்ள நினைவுப் பந்தலினை வந்தடைந்து அங்கு மாவீரர்களின் பெற்றோர் கௌரவிப்பு, வீரவணக்க உரை, கலைநிகழ்வுகள் என்பன இடம்பெறவுள்ளன.

### முல்லை மாவட்டத்தில்..

முல்லை மாவட்டத்தில் பிரதேச ரீதியாக நினைவு நிகழ்வுகள் நடைபெறவிருப்பதாக முல்லை மாவட்ட அரசியல்துறைப் பொறுப்பாளர் செ. முகுந்தன் தெரிவித்தார்.

புதுக்குடியிருப்பு நகர் பகுதியிலும், வள்ளிபுனம் பகுதியிலும், காலை 9.00 மணிக்கு நிகழ்வு நடைபெறும். முள்ளியவளைப் பிரதேசத்தில் குமுழமுனை பாடசாலையிலும், முள்ளியவளை வித்தியானந்தாக் கல்லூரியிலும், காலை 9.00 மணிக்கு நிகழ்வு இடம்பெறும். ஒட்டுசுட்டான் பிரதேசத்தில் இடதுகரை பாடசாலை நியாப் சந்தி ஆகிய பகுதிகளிலும், தண்டுவான் பாடசாலையிலும்,

(12 ஆம் பக்கம் பார்க்க)

## மின்சார வேலி விவகாரம்

# சிங்களப் படையினருக்கு எதிராக குருநகரில் வீதிமறியல், கதவடைப்பு

(யாழ்ப்பாணம்)

**யாழ். குருநகர்ப்பகுதியில் சிறிலங்கா கடற்படையினரின் மின்சார முட்கம்பி வேலியில் சிக்கி கடற்றொழிலாளர் ஒருவர் கடந்த சனிக்கிழமை பலியான சம்பவத்தைக் கண்டித்து குருநகரில் நேற்றுமறியல் போராட்டமும் முழு கதவடைப்பும் மேற்கொள்ளப்பட்டது**


குருநகர் கடற்றொழிலாளர் சங்கங்கள் ஏற்பாடு செய்திருந்த இப்போராட்டம் குருநகர் இறங்குதுறை சிறிலங்கா படைமுகாமிற்கு முன்பாக நடைபெற்றது.

நேற்றுக் காலை 8.00 மணிக்கு இறங்குதுறை பிரதான வாயிலை வழிமறித்து பலநூற்றுக்கணக்கான கடற்றொழிலாளர்கள் சிங்களப் படையினருக்கு எதிராக முழக்கங்களை எழுப்பினர்.

மீனவர்கள் கடற்றொழிலுக்குச் செல்வதற்கு இராணுவத்தினரிடம் அனுமதி அட்டைபெற வேண்டும் என்ற நடைமுறையை மாற்றக் கோரியும், கரையோரக் காவலரண்கள் முட்கம்பி வேலிகள் என்பனவற்றை அகற்றக் கோரியும் மேற்படி போராட்டத்தில் கோரிக்கைகள் முன்வைக்கப்பட்டன.

போராட்டத்தைக் கைவிடும்படி அப்பகுதி சிங்களப்படையினர் கேட்டபோதும் கடற்றொழிலாளர்கள் தமது

(12 ஆம் பக்கம் பார்க்க)



## துப்பாக்கிச்சூட்டில் இளைஞன் படுகாயம்

(திருகோணமலை)

திருகோணமலையில் நேற்றிரவு தமிழ் இளைஞர் ஒருவர் இனந்தெரியாதோரின் துப்பாக்கிச் சூட்டுக்கு இலக்காகிப் படுகாய மடைந்துள்ளார்.

இரவு 7.30 மணியளவில் திருகோணமலை சென் ஜோசப்கல்லூரிக்கு அருகில் நடைபெற்ற இச் சம்பவத்தில் காயமடைந்த விரோதயன் என்னும் இளைஞர் திருகோணமலை மருத்துவமனை அவசரசிகிச்சைப்பிரிவில் அனுமதிக்கப்பட்டுள்ளார். இவர் குறித்த மேலதிக விபரங்கள் தெரியவரவில்லை.

## கிழக்கு படுகொலைகள் நிறுத்தப்பட்டு போர்நிறுத்தம் பாதுகாக்கப்பட வேண்டும்

### -கண்காணிப்புக்குழு அவசர வேண்டுகோள்

(மட்டக்களப்பு)

கிழக்கில் நிலைமைகள் தொடர்ந்தும் மோசமடைந்து வருவதால் படுகொலைகள் உடனடியாக நிறுத்தப்பட்டு போர்நிறுத்த உடன்பாடு தடம் புரள்வதைத் தடுக்க அரசும், விடுதலைப் புலிகளும் விரைந்து செயற்பட வேண்டும் என போர்நிறுத்தக் கண்காணிப்புக்குழு அவசர கோரிக்கை விடுத்துள்ளது. கல்குடா பொலிஸ்நிலையம் முன்பாக சனிக்கிழமை பொலிசார் ஒருவர் சுட்டுக்கொல்லப்பட்டதைத் தொடர்ந்தே கண்காணிப்புக்குழு இந்த வேண்டுகோளை விடுத்துள்ளது. (32)

# பொதுக்கட்டமைப்பில் கைச்சாத்து; இல.யின் இறைமையை ஏற்றதாகாது

### அரசியல்துறைப் பொறுப்பாளர் சு.ப.தமிழ்ச்செல்வன்

பொதுக்கட்டமைப்பு உடன்படிக்கையில் கைச்சாத்திட்டிருப்பதன் மூலமாக இலங்கையின் இறைமையை விடுதலைப் புலிகள் ஏற்றுக்கொண்டிருப்பதாகக் கூறப்படுவது தவறானது என்று, விடுதலைப் புலிகளின் அரசியல்துறைப் பொறுப்பாளர் சு.ப.தமிழ்ச்செல்வன் தெரிவித்துள்ளார்.

ஆங்கில ஊடகவியலாளருக்கு வழங்கிய விசேட செவ்வியொன்றிலேயே அவர் இந்தக் கருத்தைத் தெரிவித்துள்ளார்.

பொதுக்கட்டமைப்பு உடன்படிக்கையில் கைச்சாத்திட்டிருப்பதன் மூலமாக இலங்கையின் இறைமையை விடுதலைப் புலிகள் ஏற்றுக்கொண்டுள்ளனர் என்று நிதியமைச்சர் சரத்

(12 ஆம் பக்கம் பார்க்க)

## வீரச்சாவு

25.04.1991 அன்று சிறிலங்கா இராணுவத்தின் சுற்றிவளைப்பின் போது கைது செய்யப்பட்டு தாக்கப்பட்டபோது தமிழீழ தேசிய துணைப் படை வீரர் ஒருவர் வீரச்சாவடைந்துள்ளார்.ய

● தமிழீழ தேசிய துணைப் படை வீரர் கண்டுமணி

(குழந்தை வேல்-கண்டுமணி (யோகு) சம்பூர்-5)

05.03.1996 அன்று திருகோணமலை கடற்பரப்பில் ஏற்பட்ட தாக்குதலின்போது தமிழீழ தேசிய

(12 ஆம் பக்கம் பார்க்க)

## அரிசிஆலை மீது கைக்குண்டுத் தாக்குதல்; அக்கரைப்பற்றில் ஒருவர் பலி; இருவர் காயம்!

(அம்பாறை)

அம்பாறை மாவட்டம் அக்கரைப்பற்றிலுள்ள அரிசி ஆலை ஒன்றில் நேற்று முன்தினம் இரவு நடந்த கைக்குண்டுத் தாக்குதல் சம்பவத்தில் ஒருவர் பலியாகியுள்ளார். மேலும் இரண்டு பேர் படுகாயமடைந்துள்ளனர்.

மட்டக்களப்பு சந்திவெளியைச் சேர்ந்த சபாபதி அகிலன் (வயது-25)) என்ற அரிசி ஆலை தொழிலாளியே பலியானவராவார்.

இச்சம்பவத்தில் அதே இடத்தைச் சேர்ந்த பாலசுப்பிரமணியம் கதிரமலை (வயது-35), வேலுப்பிள்ளை பேரின்பம் (வயது-40) ஆகியோர் படுகாயமடைந்து அம்பாறை வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

குறிப்பிட்ட மூவரும் சந்திவெளியைச் சேர்ந்தவர்கள் என்றும் அரிசி ஆலை ஒன்றில் தொழில்புரியும் இவர்கள் தொழில்முடித்து அறைக்

(12 ஆம் பக்கம் பார்க்க)

## பாதுகாப்பமைச்சு -கண்காணிப்புக்குழு புலிகளின் பயணம் குறித்து சந்திப்பு

(கொழும்பு)

இலங்கைப் போர்நிறுத்தக் கண்காணிப்புக்குழுவினர் நேற்று சிறிலங்கா பாதுகாப்பு அமைச்சின் அதிகாரிகளையும், சிறிலங்கா அரசாங்கத்தின் சமாதானச் செயலக அதிகாரிகளையும் சந்தித்துப் பேசியுள்ளனர்.

இராணுவக்கட்டுப்பாட்டுப் பகுதிகளில் விடுதலைப் புலிகளின் போராளிகளின் பாதுகாப்பான பயணம் குறித்து ஆராய இடம்பெற்ற இச்சந்திப்பு ஆக்கபூர்வமாக அமைந்ததாக போர்நிறுத்தக் கண்காணிப்புக்குழுப் பேச்சாளர் ஹெலன் ஓலாஸ்ரெட்றி தெரிவித்தார்.

இச்சந்திப்பின் மூலம் போக்குவரத்து குறித்த பிரச்சினைக்குப் பொதுவான தீர்வொன்றைக் காணமுடியும் என்ற நம்பிக்கை ஏற்பட்டுள்ளதாகவும் அவர் தெரிவித்தார்.

## வரிவிளம்பரம்

**K.S.K கணினி நிலையத் தின் புதிய கட்டடத் திறப்பு விழாவும், சான்றிதழ் வழங்கும் வைபவமும்**

*11. 07. 2005* புதுக்குடியிருப்பில் இயங்கும் எமது கணினி நிலையத்தில் கல்வி கற்ற,கற்று வருகின்ற அனைத்து மாணவர் களுக்குமான கலந்துரை யாடல் எதிர்வரும் 09.07.2005 சனிக் கிழமை பி.ப 3.00 மணிக்கு நடை பெற விருப்பதால் அனைத்து மாண வர்களையும் சமுகமளிக்குமாறு அன்புடன் கேட்டுக் கொள்கின்றோம்.
நிர்வாகம் (6320)

### வீடுவிற்பனைக்கு

பரந்தன்-முல்லை வீதியில் தேவிபுரம் சந்திக்கு அண்மையில், ஒரு ஏக்கர் காணியிலமைந்த கட்டுக் கிணறு, மலசலகூடத்துடன் அமைந்தவீடு விற்பனைக்குண்டு. தொடர்பு 2227586/0776910625 (6324)

### தவறிவிட்டது.

முனியாண்டி உணவகம் கரடிப் போக்கு என்ற முகவரியில் வசிக்கும் இராமையா சதாய என்பவரது அடையாள அட்டை, பயண அனுமதி அட்டை, வாகன அனுமதிப் பத்திரம் என்பன தவறிவிட்டது, கண்டெடுத் தவர்கள் ஈழநாதம் பணிமனையில் ஒப்படைக்குமாறு வேண்டப் படுகிறீர்கள். (6329)

### மணமகள் தேவை

இந்துக் குடும்பத்தைச் சேர்ந்த தனியார் நிறுவனமொன்றில் பணிபுரியும் 1973 இல் பிறந்த விசாக நட்சத்திரம் 02ஆம்பாதம் உள்ள விவகாரத்துப் பெற்ற மணமகனுக்கு தகுந்த மண மகளைப் பெற்றோர் எதிர்பார்க்கின்றனர். முகவரி:- க.சிவானந்தம்.க. திருநாவுக்கரசு (சோதிடர்) துர்க்காவீதி, 04ஆம் வட்டாரம, புதுக்குடியிருப்பு.
(சி.12255)

### தவறிவிட்டது.


செல்லையா-சுகந்தகுமார் (ஆழியவளை-தாளையடி) என்பவாது சாரதி அனுமதிப்பத்திரம், நிரந்தரப்பயண அனுமதி அட்டை என்பவற்றுடன் சில ஆவணங்களும் தவறிவிட்டது. இதனைக் கண் டெடுத்தவர்கள் ஈழநாதம் பணிமனை கிளிநொச்சியில் ஒப்படைக்கவும்
(சி.12278)

### மரக்கன்றுகள் அன்பளிப்பு

முள்ளியவளைப் பிரதேசத்தில் கரும்புலிகள் நாளை முன்னிட்டு முள்ளியவளைப் பிரதேச தமிழீழ பொருண்மிய மேம்பாட்டு நிறுவனத் தினால் கேப்பாப்பிலவு புலோக் குடியிருப்பு பகுதி மக்களுக்கு பயன் தரு மரக்கன்றுகள் நேற்று முன்தினம் வழங்கப்பட்டுள்ளது.(ஆ)

## 4 ஆம் வருட நினைவு தினம்

பிறப்பு 17 05 1977 — வீரச்சாவு 05 07 2001



**எல்லைப் படை வீரர்**

**வீர வேங்கை நடராஜா உதயராஜ்**

வீறு கொண்டெழுந்திட்ட வீர மறவனே
சுதந்திரத்திற்காய் அயராது உழைத்த மாவீரனே
எல்லைகள் பல சென்று வெற்றிகண்ட புலி வீரனே
எல்லைக் காப்புக்காய் கறுக்காய்குளம் சென்ற மன்னவனே
மாவீரனாய் இல்லம் வந்தடைந்த எம் செல்வமே.
உனை இழந்த துயர்தாழாது தவிக்கின்றோமே-ஐயா
நான்கு வருடங்கள் அல்ல நாமிருக்கும்
காலம் வரை உன் நாமம் மறவோம்.
மண்ணுக்காய் வித்தாகிப்போன எங்கள் உதயனே
மனதில் வைத்து பூசிப்போம் உன் பெயரையே

இம்மாவீரரோடு அன்றைய தினம் வீரச்சாவைத் தழுவிக் கொண்ட ஏனைய மாவீரர்களையும் இந்நாளில் நினைவு கூருகின்றோம்.

தகவல் :-
குடும்பத்தினர்.
144/1
விசுவமடு மேற்கு
விசுவமடு

(6328)

## புதிய இலவச கணினி பயிற்சி வகுப்புக்கள்

தமிழ் தகவல் தொழில்நுட்ப ஒழுங் கமைப்பும், தமிழீழ மாணவர் அமைப்பும் இணைந்து நடத்தும் இலண்டன் ஸ்ரீ கனகதுர்க்கை அம்மன் ஆலயத்தின் இலவச கணினி பயிற்சி நிலையத்தில் புதிய வகுப்புக்கள் ஆரம்பமாக உள்ளது. இதில் கற்க விரும்பும் மாணவர்கள் 08-13/07/2005 இற்கு முன்பு தமது பதிவுகளை இராமநாத புரம் மகாவித்தியாலயத்தில் மேற்கொள்ள லாம் என்பதை அறியத் தருகின்றோம்.
நிர்வாகி (6327)

## தொடர்பு கொள்ளவும்

கிளிநொச்சியில் வசிக்கும் பூமணி ஐயாத்துரை (கணேசினுடைய சகோதரி) என்பவரை லண்டனில் வசிக்கும் ஜஸ்மின் சத்தியநாதன் என்பவர் தேடுகிறார். இவர் பற்றி அறிந்தவர்கள் கீழ்வரும் முகவரிகளுக்கு தொடர்புகொள்ளுமாறு கேட்கப்படு கின்றார்.

பங்குத்தந்தை
புனித திரேசா ஆலயம்,
A9 சாலை,
கிளிநொச்சி.

சுவாமி மதுரநாயகம்
மாதா புரி,
10ஆம் வாய்க்கால்,
உருத்திரபுரம்.

(6330)



தமிழீழ மக்களே,
ஈழவிடுதலை வரலாற்றில் விலைபேறு இல்லா
ஈழத்தின் திருநாளாம் யூலை -05 என்னும் புனித நாளை
உணர்வெழுச்சியுடன் அனுஷ்டிக்க அணிதிரள்வோம்

## சாவகச்சேரி கைத்தொழில் வணிகர் மன்றம்


**காலை நிகழ்வாக தென்மராட்சிப் பிரதேச மக்கள் ஒன்றிணைந்து 05-07-2005 காலை 9.00 மணியளவில் மீசாலை மாவடி பிள்ளையார் ஆலயத்தில் அமைக்கப்பட்ட விசேட பந்தலில் கரும்புலிகள் நாள் நிகழ்வுகளும் , மாலை தமிழீழ மகளிர் இசைக்குழுவின் இன்னிசைக் கச்சேரியும் இடம்பெறும்.**

**விளம்பர அனுசரணை**

வீ.வீ.எம்.எஸ். நகைமாடம்
மிட்லன் வீடியோ
பிரகாஸ் மின் ஒட்டு நிலையம்
அப்பன் மிளகாய் வாணிபம்
அம்பிகா பார்மசி
பைந்தமிழ் வெதுப்பகம்
ஸ்ரீவிக்கினேஸ்வரா களஞ்சியம்
சுமங்கலி புடவை கடை
வீ.எம்.கே. நகையகம்
குகன் ஸ்ருடியோ

(சி.12301)

# அல்-குவைதா தீவிரவாதி சவுதியில் சுட்டுக்கொலை



நேற்று பாக்தாத்தில் இனந்தெரியாதோரால் சுட்டுக்கொல்லப்பட்ட அமெரிக்க இராணுவத் தினரின் முகாமில் பணியாற்றும் வர்ணம் பூசுப வரான ஓமார் ஒத்மனின் சடலம்அமெரிக்க இராணுவவாகனம்மொன்றில் வைக்கப் பட்டுள்ளது.

(ரியாத்)

**சவுதி அரேபியாவில் பொலிசார் மீது தாக்குதல் நடத்திய அல்-குவைதா தீவிரவாதி சுட்டுக்கொல்லப்பட்டுள்ளார்.**



சர்வதேச தீவிரவாதியான ஒசாமா பின்லேடன் சவுதியைச் சேர்ந்தவர் அந்நாட்டிலிருந்து வெளியேற்றப்பட்டதால் தற்போது ஆப்கானிஸ்தான் எல்லையில் ஒளிந்திருப்பதாகக் கூறப் படுகிறது. ஒசாமாவின் அல்-குவைதா இயக்க தீவிர வாதிகள் சவுதியில் ஏராளமாகவுள்ளனர். சவுதியில் அமெரிக்கர்கள் தங்கியுள்ள இடங்கள் மீது இந்தத் தீவிரவாதிகள் குண்டுவெடிப்புகளை நடத்தி வருகின்றனர்.

தலைநகர் ரியாத்தில் நேற்று முன்தினம் பொலிசாருக்கும், மொரக்கோ நாட்டைச் சேர்ந்த அல்-குவைதா அமைப்பின் மூத்ததீவிரவாதி யூனுஸ் முகமது இப்ராகிமுக்கும் இடையே கடும் சண்டை நடந்தது. இந்தச் சண்டையில் யூனுசை சவுதிப்பொலிசார் சுட்டுக்கொன்றனர் சவுதியில் தேடப்பட்டு வந்த மிக முக்கியமான 36 தீவிரவாதிகளில் யூனுசும் ஒருவர் என அந்நாட்டு உள்துறை அமைச்சர் தெரிவித்துள்ளார்.



கடந்த வாரம் ஆப்கானிஸ்தானில் அமெரிக்க உலங்கு வானூர்தியில் பலியான மேஜர் ஸ்ரீபன் கொன்ரீச்சின் தாய் சுயுரீச் வோஷிங்டன் தேவாலயம் ஒன்றில் நடைபெற்ற வழிபாட்டின்பின் உறவினர் ஒருவரை அணைத்து தனது துயர்துடைத்துக்கொள்கின்றார்.

## ஈராக்கில்வீடு புகுந்து எகிப்து நாட்டுத் தூதர் கடத்தல்

(பாக்தாத்)



ஈராக்கில் வீடு புகுந்து எகிப்து நாட்டுத் தூதரை தீவிரவாதிகள் கடத்திச் சென்றுள்ளனர்.

ஈராக்கில் சதாம் ஹுசைன் ஆட்சி அகற்றப்பட்ட பின்னர் அங்கு எகிப்து நாட்டு தூதராக நியமிக்கப்பட்டவர் இகாப்-அல் ஷரீப். இவர் கடந்த ஒரு மாதத்துக்கு முன்தான் ஈராக்கில் எகிப்து தூதராக பதவி ஏற்றார்.

பாக்தாத்தில் உள்ள அவரது வீட்டில் புகுந்து தீவிரவாதிகள் அவரைக் கடத்திச்சென்றனர் நேற்று முன்தினம் கண்ணிமைக்கும் நேரத்தில் இந்தச் சம்பவம் நடந்தது. அங்கிருந்த பாதுகாவலர்களால் ஒன்றும் செய்ய முடியவில்லை எனவும் தெரிவிக்கப்படுகிறது.

இந்தத் தகவலை எகிப்துதூதரக அதிகாரியும், ஈராக் உள்துறை அமைச்சக அதிகாரியும் தெரிவித்துள்ளனர். எகிப்து தூதர் கடத்தலுக்கு எந்தத் தீவிரவாத இயக்கமும் இதுவரை உரிமை கொண்டாடவில்லை. தூதரைக் கடத்திய தீவிரவாதிகளின் கோரிக்கை, நிபந்தனை என்ன என்பதும் தெரியவில்லை. இதற்கிடையில் அல்ரியாத் நகரதலைமை பொலிஸ் அதிகாரி இமாத்நூருதீன் சென்றவாகனத்தில் தீவிரவாதிகள் குண்டு வீசியதில் இரண்டு பொலிசார் பலியாகியுள்ளனர்.

## டயானாவின் வாழ்க்கை வரலாற்றைப்படித்த டயானாவின் மகன் வில்லியம் கதறி அழுதார்

(லண்டன்)


டயானாவின் வாழ்க்கை வரலாற்று தொடரைப் படித்த அவரது மகன் வில்லியம் கதறிஅழுத சம்பவம் ஒன்று இடம்பெற்றுள்ளது.

மறைந்த இங்கிலாந்து இள வரசி டயானாவைப்பற்றி இவரது தோழி சிமோன் சை மன்ஸ, "டயானா தி லாஸ்ட் வோர்ட்" என்ற தொடரை எழுதி வருகிறார். இந்த தொடர் லண்டனில் இருந்து வெளியாகும் 'சன்' பத்திரிகையில் வெளியிடப்படுகிறது.

டயானாவின் காதல் விவகாரங்கள் பற்றி இந்தத் தொடரில் பரபரப்பாக தகவல்கள் வெளியாகின. டயானா, தனது கணவர் சார்லஸ் பற்றி கூறும்போது அவருக்கு பாலியல் உறவில் ஆர்வம் சிறிதும் இல்லை என்று கூறியதாக அந்த தொடரில் குறிப்பிட்டுள்ளது. மேலும் டயானா, பாலியல் உறவு குறித்து தனது கணவர் மற்றும் தனது காதலர்களின் செயற்பாட்டை குறிக்க அவர்களுக்கு படுக்கை அறை மதிப்பெண் வழங்கியதாகவும் கூறப்பட்டுள்ளது. சார்லசுக்கு 10 இற்கு ஒன்று, தனது குதிரை பயிற்சியாளர் சேம்ஸ் ஹெவிட்டுக்கு 10 இற்கு ஒன்பது ஆலிவர் ஹோர் என்ற காதலருக்கு 10இற்கு ஆறு, அமெரிக்க முன்னாள் சனாதிபதி கென்னடியின் மகன் ஜூனியர் கென்னடிக்கு 10-இற்கு10 என்று மதிப்பெண் கொடுத்ததாக அந்தத் தொடரில் எழுதப்பட்டுள்ளது.

இந்தத் தகவல்களைப் படித்த டயானாவின் மகன் வில்லியம், கண்ணீர்விட்டு கதறியழுதார். "எனது தாயார் பற்றி வெளியாகும் இந்த தகவல்கள் எல்லாம் பொய்யானவை" என்று வில்லியம் கூறினார்.

## ஆபிரிக்காவில் வறுமையை ஒழிக்க ஒரேநாளில் மாபெரும் இசைவிழா



ஆபிரிக்காவில் வறுமையை ஒழிப்பதற்கு உலக நாடுகள் உதவவேண்டும் என்று வலியுறுத்தி உலகின் பத்து நகரங்களில் ஒரே நாளில் மாபெரும் இசை விழா நடந்தது. இதில் பல கோடி பேர் கலந்து கொண்டனர்.

ஏழை நாடுகளின் வறுமையை ஒழிப்பதற்கான நடவடிக்கைகளை எடுப்பதற்காக 'ஜி.8' எனப்படும் எட்டு பணக்கார நாடுகளின் உச்சி மாநாடு ஸ்கொட்லாந்தில் கிளெனிக் கிள்ஸ் நகரில் நடக்க இருக்கிறது.

இந்த மாநாட்டில் ஏழை நாடுகளின் கடன்களை இரத்து செய்யவும் வறுமையை ஒழிக்க ஆக்கபூர்வ நடவடிக்கை எடுக்கவும் (ஜி.8 நாடுகளின் தலைவர்களை வலியுறுத்தவும், ஆபிரிக்க நாடுகளின் வறுமைபற்றி விழிப்புணர்வு ஏற்படுத்தவும் மாபெரும் உலக இசைவிழா நேற்று முன்தினம் நடந்தது.

லண்டன் பிலடெல்பியா பரிஸ், பெர்லின், டோக்கியோ, ஒன்டாரியோ, ரோம், ஜோகன்ஸ்பேர்க் உட்பட பத்து நகரங்களில் ஒரேநாளில் 'லைவ்-8' என்ற இசைவிழா நடந்தது. ஒவ்வொரு நகரிலும் பத்து மணிநேரம் இசை நிகழ்ச்சி நடந்தது. லண்டனில் நடந்த இசை விழாவை ஐ.நா. பொதுச்செயலாளர் கொபிஅனான் தொடங்கி வைத்தார். ஜோகன்ஸ்பேர்க் நகரில் நடந்த விழாவை அந்த நாட்டின் முன்னாள் சனாதிபதி நெல்சன்மண்டேலா தொடங்கிவைத்தார்.

லண்டன் விழாவில் பால்மெக்கார்ட்டினி மற்றும் புகழ்பெற்ற இசைக் கலைஞர்கள் கலந்து கொண்டு பாடினர். அமெரிக்காவில் பிலடெல்பியாவில் நடந்த இசைவிழாவுக்கு நடிகர் வில்சுமித் ஏற்பாடு செய்திருந்தார். பத்து நகரங்களில் நடந்த விழாக்களில் கோடிக்கணக்கானோர் கலந்து கொண்டதன் மூலம் இந்த இசைவிழா உலக சாதனை படைத்தது.



அமெரிக்காவின் சுதந்திரதினமான நேற்று பாக்தாத்தில் அலங்கரிக்கப்பட்ட முகாமொன்றில் உணவருந்தும் அமெரிக்கப்படைகள்.

## பாதுகாப்பு சபை விரிவுபடுத்தப்பட ஆபிரிக்க நாடுகள் இரண்டுக்கு நிரந்தரஉறுப்புரிமைதேவை

### –ஆபிரிக்க கூட்டமைப்பு வலியுறுத்து

(லிபியா)

ஐ.நா., பாதுகாப்பு சபை விரிவுபடுத்தப்பட்டால் இரண்டு ஆபிரிக்க நாடுகளுக்கு நிரந்தர உறுப்பினர் பதவி வழங்க வேண்டும் என கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளது. இது குறித்து ஆபிரிக்கயூனியனின் அமைதிமற்றும் பாதுகாப்பு கமிஷனர் ஜின்னிட் நிருபர்களுக்கு அளித்த பேட்டியில்,

ஐ.நா.பாதுகாப்பு சபை விரிவுபடுத்தப்படவுள்ளது. அப்படி விரிவுபடுத்தப்பட்டால், இரண்டு ஆபிரிக்க நாடுகளுக்கு நிரந்தர உறுப்பினர் பதவி வழங்கவேண்டும். இது தொடர்பான முடிவு கடந்த வாரம் லிபியாவில் உள்ள சிர்டேவில் நடைபெற்ற, ஆபிரிக்க யூனியனில்உள்ள 53 நாடுகளின் வெளியுறவு அமைச்சர்கள் மாநாட்டில் எடுக்கப்பட்டது. மேலும், பாதுகாப்பு சபையில் ஆபிரிக்க நாடுகளுக்கு மொத்தமாக ஐந்து இடங்களைப் பெறவும், அதில் இரண்டு நிரந்தர உறுப்பினர் இடங்களாக இருக்க வேண்டும் எனவும் ஆபிரிக்க நாடுகளின் தலைவர்கள் விரும்புகின்றனர். இவ்விடயத்தில் ஆபிரிக்க நாடுகள் கூட்டாக செயற்படவும், கண்டத்தில் உள்ள நாடுகளிடையே பிளவு ஏற்படாமல் பாது காப்பு சபைப் பிரதிநிதிகளை தேர்வு செய்யவும் திட்டமிடப் பட்டுள்ளது. இவ்வாறு ஜின்னி தெரிவித்தார். தென் ஆபிரிக்கா, நைஜீரியா, எகிப்து, கென்யா, லிபியா மற்றும் செனகல் ஆகிய நாடுகள் ஐ.நா.பாதுகாப்பு சபையில் நிரந்தர இடம்பெற போட்டியிடலாம் .என்றும் கூறப்படுகிறது.

## மொரீயஸ்தீவில் பாராளுமன்றத்தேர்தல்

மொரீசியஸ் தீவில் நேற்று முன்தினம் தேர்தல் நடந்தது. அந்துநாட்டின் வரலாற்றில் முதன் முறையாக இந்து அல்லாத ஒருவர் பிரதமராக தேர்ந்தெடுக்கப்படுவார் என எதிர்பாக்கப் படுகிறது.

பாராளுமன்ற பிரதம பதவிக்கு ஆளும் கட்சி சார்பில் பவுல்பெரன்ஜர் போட்டியிட்டார்.இவரை எதிர்த்து 'சோசியல் கூட்டணி 'கட்சிகளின் தலைவர் நவீன ராம்கோலம் போட்டியிட்டார். 62 தொகுதிகளுக்கு நடைபெற்ற தேர்தலில் 650 பேர் போட்டியிட்டனர். ஆளும் கட்சியே மறுபடி ஆட்சியை பிடிக்குமென எதிர்பார்க்கப்படுகின்றது. அவ்வாறு ஆட்சிஅமையும் பட்சத்தில் பவுல்பெரன்ஜர் மொரீசியஸ் தீவின் பிரதமராவார் அப்படி பதவியேற்றால் இந்து அல்லாத முதல் பிரதமர் இவ ராகவே இருப்பார் எனக் கூறப்படுகிறது.



நேற்று பாக்தாத்தில் கார்க்குண்டுத் தாக்குதல் நடைபெற்ற இடத்தைப் பார்வையிடும் அமெரிக்கப்படைகள் (சம்பவத்தில் இருபொதுமக்கள் பலியானதுடன், மேலும் நால்வர் காயமடைந்துள்ளனர்).

# பின்தங்கிய பகுதி மாணவர்களின் கல்விக்கு ஊக்கமளித்து தலைவரின் சிந்தனைக்கு செயல்வடிவம் கொடு[...]பாம்


-முல்லை.ஊரகவளர்ச்சிப் பணிப்பொறுப்பாளர்

(மல்லாவி)

பின்தங்கிய பகுதி மாணவர்களின் கல்விக்கு ஊக்கமளித்து எமது தேசியத்தலைவரின் சிந்தனைக்கு செயல்வடிவம் கொடுப்போம் என முல்லை.மாவட்ட ஊரகவளர்ச்சிப் பணிப் பொறுப்பாளர் வை.குமரன் தெரிவித்தார்.

முல்லைத்தீவு மாவட்டம் துணுக்காய்ப் பிரதேச செயலர் பிரிவுக்குட்பட்ட பின்தங்கிய கிராமமான தேறாங்கண்டல் அ.த.க. பாடசாலைக்கு ஊரகவளர்ச்சிப் பணியினரால் 40ஆயிரம் ரூபாய் பெறுமதியான சூரிய மின்கலம் மாலை நேர கற்றலுக்காக வழங்கப்பட்டது. இந் நிகழ்வு தேறாங்கண்டல் அ.த.க. பாடசாலை மண்டபத்தில் கடந்த செவ்வாய்க்கிழமை அதிபர் த.யோகானந்தராசா தலைமையில் இடம்பெற்றது.

முல்லை. மாவட்ட ஊரக வளர்ச்சிப் பொறுப்பாளர் சிறப்புரை ஆற்றிய போது பின் தங்கிய வறிய கிராமத்தின் மாணவர்களின் கல்வி பின்தங்கக்கூடாது என்ற கருத்துக்கு அமைய எமது தலைவர் இந்த ஊரகவளர்ச்சிப் பணியை ஆரம்பித்தார். இத்திட்டத்தின் ஊடாக எமது தலைவரின் சிந்தனைக்குச் செயல் வடிவம் கொடுக்கின்ற இந்த வறிய நிலை மாணவருக்கு எமது பிரிவான ஊரக வளர்ச்சிப்பணி மூலம் இம் மாணவர்களின் மாலைநேர கற்றலுக்காக சூரிய மின்கலத்தினை அன்பளிப்பாக வழங்குவதில் பெரும் மகிழ்ச்சி அடைகின்றோம். ஏனெனில் நாம் அனைவரும் தேசவிடுதலையை நோக்கியே போராடி வரும் இவ்வேளையில் சமூக விடுதலையையும் நோக்கிநகரவேண்டும் எனில் எமது தலைவரின் காலத்தில் தமிழீழம் பெறும்வேளை சமூக விடுதலையைப் பெறுவதற்கு மிகவும் முக்கியமான இடத்தில் நிற்பது கல்வியே என்பது எனது கருத்து, எனக் கூறினார். முன்னதாக மாலை நேரக்கற்றலுக்காக சூரிய மின்



கலம் ஒன்றினை கிராம ஊரகவளர்ச்சிப் பொறுப்பாளர் இ.வதனன் மாலைநேரக் கற்றல் பொறுப்பாசிரியை செல்வி கா.காந்திமதியிடம் கையளித்தார். தலைமையுரையைத் தொடர்ந்து கருத்துரைகளை தேறாங்கண்டல் கிராம ஊரகவளர்ச்சிப் பொறுப்பாளர் வழங்கினார். இந்நிகழ்வில் மாதர்சங்கப் பிரதிநிதிகள், பொது அமைப்புக்கள், பொது மக்கள், பாடசாலை அதிபர், ஆசிரியர்கள், மாணவர்கள் எனப் பலரும் கலந்து கொண்டனர். இரவுநேரக் கற்றல வகுப்பிற்கு 80இற்கு மேறபட்ட மாணவர்கள் வருகின்றமை குறிப்பிடத்தக்கது. (24)

# தமிழ் மக்களின் விடுதலையுணர்வெழுச்சி இராணுவத்தை கிலி கொள்ளச் செய்துள்ளது

-கிளிநொச்சியில் சொலமன் சூ.சிறில்



(அலுவலக செய்தியாளர்)

**தமிழ் மக்களின் விடுதலை எழுச்சியானது இன்று சிறிலங்கா இராணுவத்தினரை கிலி கொள்ளச்செய்துள்ளது. சிறிலங்காப் படையினரால் யாழ். மண்ணில் ஆறு இலட்சம் தமிழ் மக்கள் சுற்றி வளைக்கப்பட்டுள்ளனர் என்கின்ற நிலைமாறி இன்று 40 ஆயிரம் சிறிலங்காப்படையினர் ஆறு இலட்சம் தமிழ் மக்களால் முடக்கிவைக்கப்பட்டுள்ளனர் என்ற நிலைக்கு மாற்றமடைந்துள்ளமையானது தமிழ் மக்கள் அனைவரதும் விடுதலை வேட்கையினையே பறை சாற்றி நிற்கின்றது.**

இவ்வாறு கடந்த வெள்ளிக்கிழமையன்று கிளிநொச்சி கலாச்சார மண்டபத்தில் நடைபெற்ற கிளிநொச்சி மாவட்ட தேசிய எழுச்சிப் பேரவையின் பேராளர் மாநாட்டில் யாழ். மாவட்ட தேசிய எழுச்சிப் பேரவைச் செயலர் சொலமன் சூ.சிறில் கலந்து கொண்டு உரைநிகழ்த்துகையில் தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்; யாழ்.மண்ணில் நிலைகொண்டுள்ள சிறிலங்கா இராணுவத்தினரின் எண்ணங்கள் யாவற்றையும் தமிழ் மக்களின் உணர்வெழுச்சியின் மூலம் அவர்களைக் கேள்விக்குரிய நிலைக்கு ஆளாக்கியுள்ளதுடன் விரக்தியின் விளிம்பிற்கும் தள்ளியுள்ளது.

இதனை இன்று யாழ். மண்ணில் நடைபெற்று வரும் மக்களின் உணர்வு பூர்வமான நடவடிக்கைகள் மூலம் காணக்கூடியதாகவுள்ளது.

இராணுவத்தைக் கண்டு ஒடுங்கிய காலம் மாறி மக்களின் உணர்வெழுச்சிக்கு முகம் கொடுக்க முடியாத நிலையில் காவல் அரண்களை விட்டு இராணுவம் ஓட்டமெடுப்பதென்பதே இன்று யாழ். மண்ணில் நடந்து வரும் ஒரு நிகழ்வாக மாற்றமெடுத்துள்ளது.

இந்த மாற்றமென்பது தமிழ் மக்களின் விடுதலை வேட்கையை விடுதலை உணர்வினை எடுத்தியம்பி நிற கின்றது.

இன்று அனைத்து மக்க ளினதும் எதிர்பார்ப்பாக அமைந்துள் ளது எமது தேசியத்தலைவரின் ஆணையாகும். தலைவன் காட்டும் சுட்டுவிரலில் தான 40 ஆயிரம் இராணு வத்தினரின் நிலை என்னவாகும் என்பது புரியும் என்றார். (சோ)

# சிரமதானம்

(மல்லாவி)

கரும்புலிகள் தினத்தை முன்னிட்டு மல்லாவி மருத்துவமனையில் சிரமதானப் பணிகள் இடம்பெற்றுள்ளன.

நேற்று முன்தினமும் நேற்றும் மருத்துவமனை உத்தியோகத்தர் க. வைகுந்தநாதன் தலைமையில் இடம்பெற்றது. மல்லாவி வைத்தியசாலை பணியாளர்கள் உத்தியோகத்தர்களினால் வைத்தியசாலை வளாகம் பிரதான வீதிகள் என்பன சிரமதானம் மூலம் துப்புரவு செயயப்பட்டன. (24)

# தென்னியங்குளம் கிராமத்தில் சமகால அரசியல் கருத்தமர்வு

(மல்லாவி)

துணுக்காய் பிரதேச தென்னியங்குளம் கிராமத்தில் சமகால அரசியல் தொடர்பான கருத்தரங்கு தென்னியங்குளம் பொதுநோக்கு மண்டபத்தில் கடந்த வியாழனன்று இரவு ஏழு மணிக்கு ஆலங்குளம்துயிலும் இல்ல பொறுப்பாளர் சி.சசி தலைமையில் இடம்பெற்றது. நிகழ்வில் இன்றைய அரசியல் நிலவரம் தொடர்பான கருத்துரைகளை முல்லை. மாவட்ட அரசியல் துறைத்துணைப்பொறுப்பாளர் கா.செல்வன் ஆற்றியதைத் தொடர்ந்து வீடியோ படக்காட்சியும் இடம்பெற்றது.

இந் நிகழ்வில் பொது அமைப்புக்களின் பிரதிநிதிகள், பொதுமக்கள், பாடசாலை மாணவர்கள் என பலரும் கலந்து கொண்டனர். (24)

# பேருந்துதரிப்பு நிலையங்கள் இன்மையால் பயணிகள் அசௌகரியம்

(கிளிநொச்சி)

வட்டக்கச்சி - கிளிநொச்சி பிரதான வீதியில் பேருந்து தரிப்பு நிலையங்கள்இன்மையால் பயணிகள் பெரும் அசௌகரியங்களை எதிர்நோக்கி வருகின்றனர்.

வட்டக்கச்சிப் பகுதியில் ஏற்கனவே கட்சன் வீதியில் அமைக்கப்பட்டிருந்த பேருந்து தரிப்பு நிலையம் இருந்த இடமே தெரியாமல் போயுள்ளதுடன் செல்வா வீதிப்பகுதி பேருந்து தரிப்பு நிலையம் வாகனம் ஒன்றினால் சேதமாக்கப்பட்டு இதுவரை திருத்தப்படவில்லை.

வட்டக்கச்சி புதுப்பாலம், கட்சன் வீதி பகுதிகளின் மர நிழல்களின் கீழேயே பேருந்துக்காக பொதுமக்கள் காத்து இருக்கவேண்டியுள்ளதுடன் பாவனையில் உள்ள ஏனைய பேருந்து தரிப்பு நிலையங்களும் மக்கள் பாவனைக்கு உகந்ததாக காணப்படவில்லை.

எனவே பொதுமக்களின் சிரமத்தை கருத்திலெடுத்து சம்பந்தப்பட்டவர்கள் நடவடிக்கை எடுக்கவேண்டப படுகின்றனர். (15)

# தொலைத்தொடர்பு நிலையம் முல்லையில் திறந்து வைப்பு

(முல்லை)

இலங்கை ரெலிக்கொம் நிறுவனத்தால் முல்லைத்தீவில்அமைக்கப்பட்ட தொலைத்தொடர்பு நிலையம் கடந்த சனிக்கிழமை காலை பத்து மணிக்கு வடக்குக்கிழக்கு மாகாண ரெலிக்கொம் பணிப்பாளர் கனகசூரியர் தலைமையில் திறந்தவைக்கப்பட்டது.

முதல் நிகழ்வாக மங்கல விளக்கினை முல்லை. மாவட்ட தமிழீழ நிர்வாக சேவைப்பொறுப்பாளர் செ.முரளி , ரெலிக்கொம் பொறியியலாளர் தமிழ்கருணாரத்தினம், யாழ்ப்பாண ரெலிக்கொம் நிறுவனத்தைச்சேர்ந்த சரவண பவான் அன்ரனிதாஸ் ஆகியோர் ஏற்றினர். தொடர்ந்து கட்டடத்தினை ரெலிக்கொம் நிறுவன நிறைவேற்று அதிகாரி சுகே அனன் நாடாவினை வெட்டித்திறந்து வைத்து பெயர்க்கல்லினையும் திறந்து வைத்து முதல் தொடர்பினையும் ஆரம்பித்துவைத்தார்.

தொடர்ந்து கருத்துரைகளை ரெலிக்கொம் நிறுவன நிறைவேற்று அதிகாரி, கடற்புலிகளின் முல்லை.மாவட்ட அரசியல்துறைப்பொறுப்பாளர் மா.ரங்கன், கச்சேரி பிரதம கணக்காளர் யோ.சௌந்தரநாயகம் ஆகியோர் நிகழ்த்தினர்.


இந்நிகழ்வில் ரெலிக்கொம் நிறுவனப்பிரதிநிதிகள், தமிழீழ நிர்வாக சேவைப் பிரதிநிதிகள், முல்லை. மாவட்டக்காவல்துறையினர் . கச்சேரி இணைப்பாளர் ஆகியோர் உட்பட பலர் கலந்து கொண்டனர். (20)

# தென்தமிழீழத்தில் கிராமிய வங்கியினால் மே மாதம் 152 பயனாளிகளுக்கு உதவி

(கிளிநொச்சி)

தென் தமிழீழத்தின் திருகோணமலை, மட்டக்களப்பு மாவட்ட கிராமிய அபிவிருத்தி வங்கிக் கிளைகளினால் இவ் ஆண்டு மே மாதத்தில் 152 பயனாளிகளிற்கு நாற்பத்தெட்டு இலட்சத்து தொன்னூற்றொராயிரத்து அறுநூற்றி ஐம்பது ரூபா கடனாக வழங்கப்பட்டுள்ளது.

மேற்படி கடன்திட்டத்தின் கீழ் விவசாயக்கடனாக 95பயனாளிகளுக்கு 28,24,250 ரூபாவும் , சுய தொழில் கடனாக 34 பயனாளிகளிகளிற்கு 14,13,400 ரூபாவும் சூரிய மின் கலத்தொகுதிக்கடனாக 23 பயனாளிகளிற்கு 6,54,000 ரூபாவினையும் கடனாக வழங்கியுள்ளதாக கிராமிய அபிவிருத்தி வங்கியின் பொது மேலாளர் தெரிவித்துள்ளார். (15)



சுனாமியினால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு அமைப்பதற்கான மாதிரி வீட்டினை ரெக்நிறுவனத்தினர் முல்லைத்தீவில் அமைத்து வருவதனைப் படத்தில் காண்க. (படம்-சகிலா)

# மாணவர்களுக்கு வைத்திய பரிசோதனை

(வட்டக்கச்சி)

கல்மடு நகர் அரசினர் தமிழ்க் கலவன் பாடசாலையில் கண்டாவளை சுகாதார வைத்திய அதிகாரி பணிமனையினரால் கடந்த வெள்ளியன்று பாடசாலை மாணவர்களுக்கான வைத்தியபரிசோதனை கண்டாவளை சுகாதார வைத்திய அதிகாரி தலைமையில் நடைபெற்றது.

கல்மடுநகர் கிராம அபிவிருத்தி சங்கத்தினரதும் நலன்விரும்பிகளினதும் வேண்டுகோளிற்கிணங்க இவ் வைத்திய சேவை ஒழுங்குபடுத்தப் பட்டது. தரம் 01 தொடக்கம் 05வரையான வகுப்புக்களைச் சேர்ந்த 88 மாணவர்களுக்கு மருத்துவப்பரிசோதனை மேற்கொள்ளப்பட்டது. இதில் கண், காது, பல் போன்ற பிரச்சினைகளுக்குபரிசோதித்து சிகிச்சை அளிக்கப்பட்டதுடன் மேலதிக சிகிச்சை பெறவேண்டிய மாணவர்களுக்கு கிளி/வைத்தியசாலையில் சிகிச்சை பெற சிபார்சுக் கடிதம் வழங்கப்பட்டது.

கண்டாவளை சுகாதார வைத்திய அதிகாரி, சுகாதார பரிசோதகர்கள், மற்றும் பொது சுகாதார மருத்துவமாது, கிராம தரிசிப்பாளர்கள் ஆகியோர் இணைந்து இம்மருத்துவ பரிசோதனையை நடாத்தினர். (12)

# குடியிருப்பு நிறைந்த பகுதில் மின்சார வேலி அமைத்து இளைஞரை கொன்றது இன அழிப்பு நடவடிக்கையே

## -யாழ்.பொது அமைப்புக்களின் ஒன்றியம் கண்டனம்

(யாழ்ப்பாணம்)

**குடியிருப்புக்கள் நிறைந்த மக்கள் செறிந்துவாழும் பகுதியில் சிங்கள இராணுவத்தினர் மின்சார வேலியை அமைத்து தொழிலுக்குச் சென்ற அப்பாவி இளைஞனை அதில் சிக்கவைத்துக் கொன்றமை சிங்களப் படைகளின் ஒரு இன அழிப்பு நடவடிக்கையே. இதை நாம் வன்மையாகக் கண்டிக்கிறோம் என யாழ்.மாவட்ட பொது அமைப்புக்களின் ஒன்றியம் வெளியிட்டுள்ள அறிக்கையில் தெரிவித்துள்ளது.**

சிறிலங்கா அரசின் கடல் வலயச் சட்டத்தினால் பாதிக்கப்பட்டு தொழில் இழந்து வாழ்வதற்காக நிர்க்கதியின்றி தாம் ஜீவனோபாயத் திற்காக சிறிய தொழிலையாவது மேற்கொண்டு வாழ்வோமென்ற நம் பிக்கையுடன் தன் குடும்பத்தின் சுமைகளை தானே சுமக்க வேண்டு மென்ற உயரியநோக்குடன் புறப்பட்ட அவ் இளைஞன் இராணுவத்தினரால் தொழில் செய்யும் பகுதிகளில் குடி யிருப்பு நிறைந்த பகுதியில் திட்ட மிட்டுக் கண்மூடித்தனமாக போடப் பட்டிருந்த மின்சார வேலியில் அகப் பட்டு பரிதாபமான முறையில் உயிரி ழந்தார்.

குருநகரைச் சேர்ந்த மு.ராஜ் என்ற இளைஞன் பலியாகியுள் ளமை இராணுவத்தினரின் மறை முகமான இனஒழிப்பாகும். இதனை வன்மையாகக் கண்டிக்கிறோம்.

சிறிலங்காப் படைகள் தங்கள் காவலரண்களையும், வேலிகளை யும் அகற்றி விட்டு வெளியேறினால் தான் இது போன்ற இழப்புக்களை தடுக்க முடியும். இந்த இளைஞனின் பிரிவால் துயருறும் குடும்பத்திற்கு யாழ்.மாவட்ட பொது அமைப்புக் களின் ஒன்றியம் தனது ஆழ்ந்த அனுதாபத்தை தெரிவித்துக்கொள் கிறது என அதில் மேலும் தெரிவிக் கப்பட்டுள்ளது.

# இராணுவத்தின் தான்தோன்றித்தனமான செயலுக்கு யாழ்.பல்கலை. மாணவர் ஒன்றியம் கண்டனம்

கடந்த சனிக்கிழமை குருநகர் கடற்பரப்பில் தனதுதொழிலை முடித்துக்கொண்டு வீடு திரும்பிய அப்பாவி இளைஞன் இராணுவத் தின் பாதுகாப்பு வேலிக்கு பாய்ச் சப்பட்டிருந்த மின்சாரத்தினால் தாக்கப்பட்டு அதேயிடத்தில் பரிதாப மாகக் கொல்லப்பட்ட சம்பவத் தினை யாழ்.பல்கலைக்கழக மாண வர்களாகிய நாம் வன்மையாக் கண்டிக்கின்றோம்.

குருநகரில் தொழிலுக்குச் சென்றுதிரும்பிய இளைஞன் இராணுவத்தினர் போட்டிருந்த மின்சார வேலியில் சிக்கி உயிரி ழந்த சம்பவம் குறித்து யாழ். பல் கலை மாணவர் ஒன்றியம் வெளி யிட்டுள்ள கண்டன அறிக்கையில் இவ்வாறு தெரிவிக்கப்பட்டுள்ளது.

இராணுவத்தினர் தமிழ்மக்கள் மீது திட்டமிட்டு மேற்கொண்டுவரும் கொலை முயற்சியின் ஒருஅங்கமா கவே மக்கள் நடமாடும் பிரதேசங் களில் தான்தோன்றித்தனமாக இவ்வாறான கொலை வலைகளை விரித்துள்ளனர். எமது ஏதுமறியாத அப்பாவி மக்கள் இவற்றில் சிக்கிக் கொல்லப்படுவது தொடர்ந்த வண் ணமே உள்ளது. இனியும் இராணுவத்தின் காடைத்தனத்தை அனுமதிக்க முடியாது. இராணுவம் எமது மக்களின் வாழ்விடங்களை விட்டு உடனடியாகத் தங்கள் இடங்களுக்குச் செல்லவேண்டும் இல்லையேல் மக்கள் திரண் டெழுந்து இந்தக் கயவர்களை அவர்கள் இடங்களுக்கு அனுப்பி வைக்கும் காலம் மிகவிரைவில் உருவாகும் என்பதை மீண்டும் இந்த இராணுவத்தினருக்கு வலி யுறுத்திக்கூறுகிறோம்.

இராணுவத்தின் தான்தோன்றித் தனத்தால் உயிரிழந்த இளைஞ னுக்கு எமது அஞ்சலியைச் செலுத் துவதோடு இராணுவத்தினால் காவு கொள்ளப்பட்ட இளைஞனின் உறவுகளுக்கு யாழ். பல்கலைக் கழக மாணவர்களாகிய நாம் ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரி வித்துக்கொள்கிறோம் என அதில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இவ்வாறான கண்டன அறிக்கை ஒன்றை தமிழ்த்தேசிய விழிப்புணர்வு கழகமும் வெளியிட்டுள்ளது.

# சிறிலங்கா பொலிசாரின் கெடுபிடிகளால் முச்சக்கர வண்டி ஓட்டுனர்கள் விசனம்

(தென்மராட்சி)

சிறிலங்கா பொலிசாரின் கெடுபிடிகள் குறித்து முச்சக்கர வண்டி ஓட்டுனர்கள் விசனம் வெளியிட்டுள்ளனர்.

யாழ். குடாநாட்டில் கடந்த சில நாட்களாக சிறிலங்காப் பொலிசார் மேற்கொண்டுவரும் கெடுபிடி நடவடிக்கைகள் குறித்து முச்சக்கர வண்டி ஓட்டுனர்கள் கடும் விசனம் தெரிவித்துள்ளனர்.

ஆவணங்கள் சரியாக இருந்தும் போலியான காரணங்களைக் காட்டி மூலைக்கு மூலை பொலிசார் வாகனங்களை மறிப்பதால் தொழில் செய்ய முடியாத நிலை தமக்கு ஏற்பட்டுள்ளதாகவும் தம்மைத் துருவித்துருவி ஆராயும் பொலிசார், இலஞ்சம் வாங்குவதிலேயே குறியாக இருக்கின்றனர் என்றும் யாழ்.குடாநாட்டில் நாள் தோறும் பெருகிவரும் குற்றச் செயல்களை கட்டுப்படுத்தவோ, குற்றவாளிகளைப் பிடிக்கவோ முடியாத பொலிசார் கெடு பிடி நடவடிக்கைகளில் ஈடுபட்டிருப்பதாகவும் தெரிவித்துள்ளனர். (28)

# பனை மரங்களை தறிப்போருக்கு எதிராக கடும் நடவடிக்கை

(தென்மராட்சி)

யாழ். குடாநாட்டில் சட்ட விரோ தமாக பனை மரங்களை தறிப் போருக்கு எதிராக கடும் நடவடிக் கையை தாம் எடுக்க உள்ளதாக தமிழீழ பொருண்மிய மேம்பாட்டு நிறுவனம் அறிவித்துள்ளது.

பட்ட பனை மரங்கள், வீட்டுக்கு அச்சுறுத்தலான பனைமரங்கள், வீடுகட்டும் இடத்திலுள்ள பனை மரங்களை தவிர ஏனைய விதி முறைகளுக்கு உட்படாத பனை மரங்களைத் தறிப்பது குற்றம் என் றும் பனை மரங்கள் தமிழீழ வளங் களில் தன்னிகரில்லாத சொத்து என்றும் இதில் தெரிவிக்கப்பட் டுள்ளது. (28)

# நவீன வசதிகளுடைய நகரமாக சாவகச்சேரியை மாற்ற நடவடிக்கை

## - யாழ்.அரச அதிபர் தகவல்

(தென்மராட்சி)

சாவகச்சேரி நகரத்தை நவீன வசதிகளுடைய நகரமாக மாற்ற நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாக அரசாங்க அதிபர் கணேஷ் தெரிவித்துள்ளார்.

யாழ்.குடாநாட்டிற்கு அடுத்த கட்டமாக சாவகச்சேரி நகரத்தை நவீன வசதிகளுடைய நகரமாக மாற்ற விரைவான நடவடிக்கைகள் எடுக்கப் பட்டுள்ளதாக யாழ். அரசாங்க அதிபர் தெரிவித்துள்ளார்.

இதற்கான திட்டவரைவுகளை தயாரிப்பதற்கென்று கொழும்பிலிருந்து நகர அபிவிருத்தி அதிகார சபையின் அதிகாரிகள் கடந்த சில வாரங் களுக்கு முன்னால் இந்த நகரைப் பார்வையிட்டு சென்றிருப்பதாகவும் விரை வாகப் பெரும் நகராக உருவாக்கப்படும் என்றும் அவர் தெரிவித்தார். (28)

# பிரதேச சபையின் பாவனைக்கான வாகனங்களுக்கு பற்றாக்குறை!

## ஈ.பி.டி.பி யினர் கையில் வாகனங்கள்

(யாழ்ப்பாணம்)

யாழ்.மாவட்டத்திலுள்ள பிரதேச சபை களின் பாவனைக்கான வாகனங்கள் பற்றாக் குறையாக காணப்படுவதாக பிரதேசசபைக ளின் செயலாளர்கள் உள்ளூராட்சி உதவி ஆணையாளர் வி.இராசையாவிடமும் யாழ். மாவட்ட அரசாங்க அதிபர் கே.கணேசிடமும் முறையிட்டுள்ளனர்.

பிரதேச சபைகளால் மேற்கொள்ளப்பட்டு வரும் உள்ளூர் அபிவிருத்தித் திட்டங்களை கண்காணிக்கவும் மேற்பார்வை செய்யவும் மற்றும் வெளிக்களப் பணிகளை மேற் கொள்ளவும் பிரதேச சபைகளின் அதிகாரி களுக்கு போக்குவரத்து வாகனங்கள் அவசிய தேவையாகக் காணப்படுகின்றன.

எனினும் யாழ்.மாவட்டத்திலுள்ள பல பிர தேசசபைகளிலும் நிலவும் வாகனப் பற்றாக் குறையால் தம்மால் மேற்கொள்ளப்படும் வெளிக்களப் பணிகளும், உள்ளூர் அபிவி ருத்தி நடவடிக்கைகளும் பாதிக்கப்பட்டுள்ள தாக சுட்டிக்காட்டியே இம்முறைப்பாடு செய்யப் பட்டுள்ளது.

இதேவேளை யாழ். மாவட்டத்தின் பல பிரதேச சபைகளது வாகனங்களை ஈ.பி.டி. பியினர் கையகப்படுத்து வைத்திருக்கின்றமை யும் குறிப்பிடத்தக்கது. (33)

# வடக்கு கிழக்கு பிராந்திய நிர்மாணிகள் சங்கம் அங்குரார்ப்பணம்

(வவுனியா)

வடக்கு கிழக்குப் பிராந்திய நிர்மாணிகள் சங்க அங்குரார்ப்பண நிகழ்வு நேற்று முன் தினம் வவுனியாவில் இடம் பெற்றது.

வவுனியா உள்ளூராட்சித் திணைக்கள உதவி ஆணையாளர் அலுவலக மாநாட்டு மண்டபத்தில் இடம் பெற்ற இந்நிகழ்வில் தலைவராக லோகநாதனும் செயலாளராக சி.சுந்தரலிங்கமும் பொருளாளராக அன்ரனும், உபதலைவராக வி.ரஞ்சிதமூர்த்தியும், உப செயலாளராக பத்மநாதனும் மேலும் பதி னொரு நிர்வாகசபை உறுப்பினர்களும் தெரிவு செய்யப்பட்டனர். இந்நிகழ்வில் வவுனியா மாவட்ட அரசாங்க அதிபர் சண்முகம், முல் லைத்தீவு மாவட்ட அரசாங்க அதிபரின் பிரதி நிதியான பிரதித்திட்டப் பணிப்பாளர் திருமதி வில்வராசா, தமிழீழ நிர்வாக சேவை துணைப்பொறுப்பாளர் பொ.இளஞ்சேரன், வவு னியா மாவட்ட அரசியல்துறைப்பொறுப்பாளர் ஞானம், தமிழீழ பொருண்மிய மேம்பாட்டு நிறுவன உட்கட்டுமானப் பகுதி பொறுப்பாளர் கலை வாணன், மற்றும் வடக்கு கிழக்கிலுள்ள எட்டு மாவட்ட நிர்மாணிகள் சங்கங்களின் நிர்வாக சபை உறுப்பினர்களான 72 பேரும் கலந்து கொண்டனர். தொடர்ந்து இடம்பெற்ற நிகழ்வில் எட்டு மாவட்ட சங்கங்களின் தலைவர்கள் எட்டுப்பேரும் தத்தமது ஒப்பந்தக்காரர் எதிர் கொள்ளும் பிரச்சினைகள் குறித்தும் பிராந்தியத்தின் உட்கட்டுமானம் குறித்தும் ஒன்றித்து செயற்படுவது குறித்தும் உரை யாற்றினர்.

# மகேந்திரவரதன் அறிவாலயம் அஞ்சனா முன்பள்ளி திறப்பு விழா

(வட்டக்கச்சி)

வட்டக்கச்சி கட்சன் வீதி அமரர் பரஞ்சோதி மகேந்திரவரதன் ஞாப கார்த்தமாக அவரது சகோரதரர் கலியுகவரதன் அவர்களின் நிதியுதவியுடன் கிளி. கிழக்கில் புனர்வாழ்வு நிறுவனத்தின் அனு சரணையுடன் மகேந்திரவரதன் அறிவாலய மும், அஞ்சனா முன்பள்ளிக் கட்டடத்திறப்பு விழாவும் நேற்றுக்காலை 10.30 மணிக்கு தமிழர்புனர்வாழ்வுக்கழக இணைப்பாளர் ராஜன் தலைமையில் இடம்பெற்றது.

இந்நிகழ்விற்கு வருகைதந்த அனைவரும் சோதி விநாயகர் ஆலய முன்றலிலிருந்து வட்டக்கச்சி மகாவித்தியாலய மாணவர்களின் பாண்ட் வாத்தியத்துடன் அழைத்து வரப்பட்டனர். மங்கல விளக்கினை மகேந்திர வரதனின் தகப்பனார் பரஞ்சோதி, துணை வியார், கரைச்சிப் பிரதேசசபை விசேட ஆணையாளர் பொன்.நித்தியானந்தம்,ஆரம்பப் பிள்ளைப் பருவப்பணிப்பாளர் பாண்டியன், கிளி.மாவட்ட மேலதிக அரசஅதிபர் வேதநாயகம், கிளி.மாவட்ட அரசியல்துறைப் பொறுப்பாளர் கலைவாணன், அரச, அரச சார்பற்ற இணையங்களின் பணிப்பாளர் கணேசபிள்ளை ஆகியோர் ஏற்றினர். பொதுச் சுடரினை அரசியல்துறைதுணைப் பொறுப் பாளர் சோ.தங்கனும், தேசியக்கொடியினை கிளி.மாவட்ட அரசியல்துறைப் பொறுப்பாளர் கலைவாணனும், தமிழர்புனர்வாழ்வுக்கழகக் கொடியினை தமிழர் புனர்வாழ்வுக்கழகத் தைச சேர்ந்த கெங்காதரனும், முன்பள்ளி கல்வி மேம்பாட்டுக்கொடியினை தமிழர் புனர் வாழ்வுக்கழகத்தின் ஆரம்பப்பிள்ளைப்பருவப் பணிப்பாளர் பாண்டியனும், முன்பள்ளிக் கொடியினை முன்பள்ளி ஆசிரியர் கஜேந்திரனும் ஏற்றிவைத்தனர். அதனைத் தொடர்ந்து மாவீரர்களின் திருவுருவப்படங் களிற்கு மலர்மாலை அணிவித்து ஈகச்சுடர் ஏற்றப்பட்டது.



கட்டடத்தின் பெயர்ப்பலகையினை கிளி.மாவட்ட மேலதிக அரசாங்க அதிபர் வேதநாயகம் திரைநீக்கம் செய்து வைக்க, கட்டடத்தினை அரசியல்துறை துணைப் பொறுப்பாளர் சோ.தங்கன் அவர்கள் நாடாவை வெட்டித் திறந்துவைத்தார். மகேந் திரவரதன் அறிவாலயத்தை சகோரதரனான கலியுகவரதனும், அஞ்சனா முன்பள்ளிக் கட்ட டத்தினை அஞ்சனாவின் சகோதரன் பத்ம காந்தனும் நாடாவை வெட்டித் திறந்து வைத்தனர். சிறப்புரைகளை தமிழர் புனர்வாழ்வுக்கழக இணைப்பாளர் ராஜன் கலியுக வரதன், கிளி.மாவட்ட அரசஅரசசார்பற்ற நிறு வனங்களின் இணையத்தலைவர் கணேசபிள்ளை, மேலதிக அரசாங்க அதிபர் வேதநாயகம் ஆரம்பப் பிள்ளைப்பருவ பணிப்பாளர் பாண்டியன், அரசியல்துறைதுணைப்பொறுப்பாளர் சோ.தங்கன ஆகியோர் நிகழ்த்தினர். கட்டடத்தினை தனது சொந்தச்செலவில் கட்டிய கலியுகவரதனுக்கு நினைவுப்பரிசில்கள் வழங்கப்பட்டுள்ளன.(12)

# உயிர் கொடுத்து உரிமை காத்த உத்தமர்கள் கரும்புலிகள்

ப.துஷ்யந்தன்

அன்று தமிழர் தேசம் தவித்துக் கொண்டிருந்தது தமிழரின் கலாசார நகரம் என அழைக்கப்படும யாழ்ப்பாண தேசம் சிங்களப் படைகளின் ஆக்கிரமிப்பு வலைக்குள் வீழ்ந்து கொண்டிருந்தது. வடமராட்சி மண் எதிரிப்படைகளின் இராணுவ இயந்திரத்திற்குள் சிக்கி விட்டதான செய்திகள் தமிழர்களின் மனங்களில் முள்ளாய் குத்தியது. அன்றைய ஒரு சூழ்நிலையில் தான் எமது போராட்டசக்தியின் புதுவடிவம் ஒன்று பிரசவிக்க துடித்துக் கொண்டிருந்தது. வெற்றிக்களிப்பில் எக்காளமிட்டு வடமராட்சி நெல்லியடி மத்திய கல்லூரியில் நிலை கொண்டிருந்த பகைப்படைகள் அந்த திடீர் அதிர்ச்சியை எதிர்கொள்ள நேரங்கள் நெருங்கி கொண்டிருந்தன.





மனிதப்பிறப்பின் மகத்தான உயிரை தன் மக்களின் விடுதலைக்கு உரமாக்கி புதிய சகாப்தம் ஒன்றை ஆரம்பிப்பதற்கு அந்த நெருப்பு மனிதனின் கந்தகம் சுமந்த ஊர்தி எதிரிப்படை முகாமின் உயிர்நாடியை மோதி வெடிக்கிறது. அந்தமுகாம் மட்டுமல்ல பகைதேசமே அதிர்ந்தது இது நடந்து இன்று 18 ஆண்டுகள் கடந்து விட்டன. அந்த உன்னத வீரன் தொடக்க உரை எழுதிய கரும்புலிகள் வரலாறு எம்மினத்தின் காவற்சுவர்களாய் தொடர்ந்து கொண்டிருக்கிறது.

1987.07.05 அன்று மில்லர் என்கின்ற அந்த மாவீரன் ஆரம்பித்துவைத்த உயிர்கொடைத் தாக்குதல் கரும்புலிகள் நாளின் ஆரம்பப் பதிவானது தமிழினத்தை அடங்கிவிட்டோம் என இறுமாப்புடன் இருந்த சிங்கள தேசம் குழம்பிப்போனது. தமிழினம் மீண்டும் தலை நிமிர்ந்து கொண்டது.

"என்ர மனசில செத்தவங்கள் ஞாபகங்கள்தான் நிரம்பி வழிகிறது. அவர்களை என்னால் மறக்கமுடியாது."

என உயிர்நீத்த மாவீரர்களை அதிகம் நேசித்து வந்த மில்லர் தன் சாவையும் அர்த்தமாக்கி இந்த மண்ணின் விதையானான்.

ஒரு தேசம் சுதந்திரம் பெறும் நிலையை அடைவதற்கு அத்தேசம் பல தியாகங்களைச் செய்திருக்கவேண்டும், அப்படிப்பட்ட சுதந்திர இலக்கை அடைய முயன்று கொண்டிருக்கின்ற எமதுதேசமும் பல ஒப்பற்ற தியாகங்களை இம் மண்ணில் செய்து வந்திருக்கிறது. தனது பிறந்த மண்ணை பிரிந்து வாழ்கின்றவர்களும் தமது உறவுகளை பிரிந்து வாழ்கின்றவர்களும், தமது உறவுகளை இழந்து வாழ்கின்றவர்களும் எனப் பல்வேறு இழப்புக்களையும் பிரிவுகளையும் சந்தித்து வாழ்கின்ற எம்மினம் சுதந்திரத்திற்காய் உயிர்ப்புடன் போராடிக் கொண்டிருக்கிறது. அந்த உயிர்ப்பான போராட்டத்திற்கு தமது உடலை வெடியாக்கி உயிரை உரமாக்கி காற்றுடன்கலந்துவிட்ட கரும்புலிகளின் தியாகங்கள் அளவிட முடியாதவை.

மனித வாழ்வின் பந்த பாசங்கள் விருப்பு வெறுப்புக்கள் வாழ்வின் இலட்சியங்கள் என சாதாரண நிலையில் வாழ்கின்ற மனித வாழ்க்கையைவிட - கரும்புலிகளின் வாழ்க்கை வித்தியாசமானது சாதாரண வாழ்வியல் முறைகளை தமது இனம் அடையவேண்டும்.

என்பதற்காக தன்னாலான அதி உச்ச தியாகத்தைச் செய்ய சித்தமானவர்கள் தான் இந்தக் கரும்புலிகள். இவர்கள் சாதாரண மக்கள் மத்தியில் சாதாரணமாகவே வாழ்ந்தவர்கள் காலத்தின் கட்டளையால் போராளியாகி போர்க்களங்கள் பலவற்றில் வீரசாதனை படைத்தவர்கள்

"மாங்குளம் முகாம்பற்றி எனக்குத்தான் அதிகம் தெரியும் எனவே நான்தான் சக்கை லொறி கொண்டு போகவேணும் நான் புறப்படுகிறேன் இதோ - மாங்குள முகாம் முடிஞ்சுது" எனக்கூறி மாங்குள எதிரி முகாமை நோக்கி வெடிபொருள் ஏற்றிய வண்டியுடன் சென்று ஆகுதியான லெப்கேணல் போர்க் எனும் கரும்புலி மாவீரனின் தியாகம் அறிந்து இந்த மண் வியந்து நின்றது,

"மன்னாரில் நடக்கிற முதல் கரும்புலித் தாக்குதலை நான்தான் செய்யவேண்டும்.நான் திரும்பிவரமாட்டன். என்னால் முடிந்த அளவுக்கு உள்ளே சென்று முகாமின் சுவரோட மோதுவதுதான் எனது இலக்கு" என தனது உயிர் கொடுத்து பகையழிக் கும் இலக்கை சொல்லிச்சென்ற கரும்புலி மேஜர்-டாம்போவின் உயிர்கொடுக்க உரிமையு டன் சென்று வெடித்தநிலையை எண்ணிப் பார்க்க வேண்டும்.

"அம்மா நான் இயக்க வேலையா ஒரு இடத்திற்கு போக இருக்கிறன் இதுமுக்கியமான வேலை இந்த வேலையின் உழைப்பு வீட்டுக்கு வராது அது நாட்டுக்கு மட்டும் தான்." எனத் தனது தாயிடம் கூறி இறுதி விடைபெற்று சென்று உயிர்கொடுத்து வெடித்து கரும்புலி மாவீரனான கப்டன் கொலின்ஸ் எனும் கரும்புலியின் தியாகம் எவற்றுடன் தான் ஒப்பிடமுடியும்.

இப்படியாகப் பல நூறு கரும்புலி மாவீரர்கள் தமைக்கொடுத்து எமைக்காத்திருக்கிறார்கள்.

"பலவீனமான எமது இனத்தின் மிகவும் பலம் வாய்ந்த ஆயுதமாகவே நான் கரும்புலிகளை உருவாக்கினேன். கரும்புலிகள் எமது இனத்தின் தற்காப்புக் கவசங்கள் போராட்டப் பாதையின் தடைநீக்கிகள்" என கரும்புலிகளின் ஒப்பற்ற சக்தியை தமிழீழத்தேசியத் தலைவர் அவர்கள் குறிப்பிட்டுள்ளார்.

சாதாரணமான மனித வாழ்க்கை வாழ்கின்ற இவ்வுலகில் மனிதன் தன்னாலான தியாகங்களை மட்டும்தான் செய்ததாய் நாங்கள் வரலாறாய் கண்டோம். ஆனால் தன்னையே தியாகம் செய்கின்ற அளப்பெரிய உயிர்த்தியாக வரலாற்றை எமது மண்ணில்தான் நாம் கண்டுவருகின்றோம். தமது இலட்சியத்துக்காய் சபதமெடுத்து சாவினை ஏற்கத் துணிந்து கரும்புலிகள் வரலாற்றில் அங்கயற்கண்ணி எனும் பெண்புலியின் கரும்புலித்தாக்குதல் எமது இனத்தின் போராட்ட வரலாற்றில் ஒரு திருப்பு முனையாக அமைந்தது.

பல்வேறு சமூக அடக்கு முறைகளிற்குள் வாழ்கின்ற எமது பெண்களில் அங்கயற்கண்ணியின் கரும்புலித்தாக்குதல் புது மாறுதலை உண்டு பண்ணியது.



தனியொரு பெண்ணாய் சென்று எதிரியின் போர்க்கப்பலில் குண் டைப் பொருத்தி வெடிக்கவைத்து தன் உயிரையும் கொடுக்கச் சித்தமான முதல் பெண் கரும்புலி அங்கயற்கண்ணியின் அற்புத தியாகமறிந்து உலகம் வியந்தது.

பல பத்து மைல்கள் உடலில் குண்டைக் கட்டிக்கொண்டு நீந்திச் சென்று எதிரிகளின் பார் வைகளிற்குள் சிக்காது உள்புகுந்து பாதுகாப்புடன் நின்றிருந்த எதிரியின் போர்க் கப்பலில் குண்டைப் பொருத்தி வெடிக்க வைப்பது அவ்வளவு சுலபமான காரியமல்ல. இத் தாக்குதலை தானேசெய்ய வேண்டும் என அடம்பிடித்து உட லை வருத்தி பயிற்சி எடுத்து இலக்கை தகர்த்து தானும் வெடித்த அப்பெண் கரும்புலியின் சாதனை எமது போராட்ட வரலாற்றில் புதுப்பதிவானது.

சமூகத்தின் அடக்குமுறையினையும் தன் இனத்தின் அடக்கு முறையினையும் ஒருசேர உடைத்தெறியப் போராடும் எம்மினத்து பெண்களில் அங்கயற்கண்ணியின் கரும்புலித் தாக்குதல் புது வேகத்தை ஏற்படுத்தியிருந்தது.

அங்கயற்கண்ணியின் வழியில் பல பெண் கரும்புலிகள் இம் மண்ணில் தமது உயிர்களை விதைத்து ஆகுதியாகியிருக்கிறார்கள்.

இப்படியாகத் தமது உயிர்களை தியாகம் செய்யத் துணிந்து சென்ற அவ் அற்புத வீரர்களின் பெயர் சொல்லுகின்ற இந்நாளில் தமது பெயர் குறிப்பிடாது முகவரி குறிப்பிடாது முகம் காட்டாது சென்று வெடித்து எம் விடுதலைக்கு பலம் சேர்த்து எம் மனங்களில் மறைபொருளாய் வாழ்ந்து கொண்டிருக்கும். அவ் அளப்பரியதியாகிகளின் வரலாற்றை எவ்வாறு மதிப்பிடுவது இவர்கள் பற்றி கல்லுக்குள் ஈரம் எனும் கரும்புலிகள் காவியம் சொல்லுகின்ற நூல் குறிப்பிடுகையில் "மன ஒருமைப் பாட்டோடு தங்களைத் தாங்களே வழிப்படுத்தி எங்கள் இயக்கத்தின் உயரிய விழுமியங்களைக் காத்த அந்தப் புனிதர்கள் தான் அழியப் போகும் கணப்பொழுதுகளிலும் நிதானத்துடனும் விவேகத்துடனும் செயலாற்றி பகைவனின் இலக்குகளை மட்டும் அழிப்பதில் குறியாக இருந்த அந்தக் கரும்புலிகள் முகத்தை மறைத்து புகழைவெறுத்து மனித தியாகத்தின் இமயத்தைத் தொட்டுவிட்ட பிரபாகரனின் குழந்தைகள்..." எனக் குறிப்பிடுகின்றது.


எந்த நேரத்திலும் சாவு வரும் என வாழும் போராளிகளிற்குள் இந்த நேரத்தில் தான் எனது சாவு என சாவைத்தேடிப் போன எமது மண்ணின் ஒப்பற்ற ஆயுதமான கரும்புலிகள் பற்றி, அவர்களின் தியாகங்கள் பற்றி கூறுவதற்கு சாதாரண மனிதர்களால் முடியாது. அவர்களது தியாகத்திற்கு நிகர் அவர்களே.

உயிர்ப்பூக்களாய் எம் தேசத்து நந்தவனத்தில் மலர்ந்திருக்கின்ற கரும்புலி மாவீரர்களின் நினைவுகளை சொல்லிநிற்கும் இந்நாளில் அவர்களின் ஆத்மா பிரிகின்ற வேளை சொல்லிச் சென்ற புலிகளின் தாகம் தமிழீழத் தாயகம் எனும் இலட்சிய வாசகம் நனவாக்கப்பட வேண்டியது நம் கடமையாகவுள்ளது. அதுவே நாம் இம் மாவீரர்களுக்கு செய்கின்ற மிகப்பெரிய மரியாதையாவிருக்கும்.

யாழ்ப்பாணம்

# கரும்புலிகள் நினைவுகளுடன்...

## மலையென நின்ற பகையை அலையென எழுந்தழித்தவர் கரும்புலிகள்



நெல்லியடியிலே வெடித்தது மில்லரெனும் முதற்கரும்புலி
தொல்லைகள் தந்தவர் செத்துத் தொலைந்தனர்-அன்று
வல்வை மண் தந்த புலித் தலைவன் படை நடத்த
எல்லை தாண்டி வந்த பகை முடித்தனர் கரும்புலிகள்
கொள்ளை அழகு மேனியவள் எங்கள் ஈழத்தாய்-மண்
பிள்ளைகள் போய் வெடித்தனர் பகைவன் வீட்டினுள்
நெஞ்சத்தில் விடுதலைத் தீ எரிந்திடவே
செருக்களத்தில் செந்நீராடியவர்கள் கரும்புலிகள்
எம் தமிழீழத்தில் சிங்களப் படையை அழித்திட
கொண்டனர் இலட்சியம் கரும்புலியென வெடித்திட
கண்டதும் பகைவன் அஞ்சி அலறி ஓடிட
ஈழக்கடலின் மேனியேறி வெடித்தனர் நீலக்கரும்புலிகள்
தாய் நிலத்து மேனிதனில்-எங்கள்
தலைவன் காட்டிய திசைதனில்
விண்ணதிரும் வெடி சுமந்து-மண்
வீரம் காத்து மடிந்தனர் தரைக்கரும்புலிகள்
தாய் நிலம் விழுங்கிய பகைவர்களின் இருப்பிடம் ஏறி
நெருப்பெரித்த நெஞ்சங்கள் கரியபுலிகள்-இங்கு
ஈழஎல்லை அடைந்திடும் நாள்வரை-எங்கள்
கரியபுலிகள் காலில் பணியும் கொடிய பகை யாவும்.

ம.சுரேந்திரன்

## எரிதணல் குளித்துச் சென்று எதிரிக்கு எமனானீர்



ஈழத்தின் திசை வெளிக்க
வாழ்வழித்த வல்லோரே
ஆழப்பதிந்த உம்
அற்புத தியாகத்தை
மீளவும் சொல்லுகின்றோம்
மிகையில்லை உம் தியாகம்

பகை வந்து எமையழிக்க
உமையழித்து எமைக்காத்தீர்
எரிதணல் குளித்துச்சென்று
எதிரிக்கு எமனானீர்
உடல் வருத்தி வெடிசுமந்து
படைமுகாமில் போய் வெடித்தீர்

போகின்றோம் என்று சொல்லி
புறப்பட்ட உம் ஊர்தி
பேய்க்குகைக்குள் போய்வெடிக்க
விம்மியது எம் நெஞ்சு
வீரத் தமிழ் மண்ணை
வியந்தது இவ்வுலகு


கல்லுக்குள் ஈரமாய்
கனிகின்ற உம் மனதில்
கலந்துவிட்ட உணர்வுகளை
வல்ல கவிஞராலும்
வடித்துவிட முடியாது

பகைக் கலத்தை அழிப்பதற்காய்-நீர்
வெடிசுமந்து செல்லும் வேளை
விடைகொடுக்கும் நண்பர்களின்
கடைக்கண்ணோரம் கசியும்-அவர்
இதயத்தில் இடி இறங்கும்
இமயத்தில் உம் பெயர்தெரியும்

சாவிற்கு நாள் குறித்து
சாதனையில் உயிர் கொடுத்த
சரித்திரத்து நாயகரே
உம் தியாகம் நாம் மறவோம்
உமைப் போற்றும் எம் தேசம்.

க.ப.பிரபு

## தீயில் நனைந்து தமிழீழம் காத்தவர்கள்



கண்ணீர் வடிப்பதற்காக வல்ல இந்நாள்
கலங்கரை விளக்காய் தாயக விடிவிற்காய்
காவியமானவர்களின் நினைவு நாள் இன்று

எண்ணில் அடங்கா சாகங்கள் படைத்த
எமது ஈழவிடுதலை வரலாற்றில்
உயிர்க் கொடை வழங்கிய உத்தமர்கள்

எம் இனத்தின் உரிமை வாழ்வுக்காய்
உயிரையே குண்டாக மாற்றி
நடமாடிய நெருப்பு மனிதர்கள்

எரி தீயை விழுங்கி தமிழீழக் கனவைக் கண்டவர்கள்
குண்டைச் சுமந்து சென்ற போதும்
குன்றா மன உறுதி கொண்டவர்கள்

கொண்ட கொள்கையில் வென்று நின்றவர்கள்
தமக்கென்று வாழாது எமக்கென்று தம் வாழ்வை
இடியென முழங்கிய ஓசையுடன் முடித்துக் கொண்டவர்கள்

உடல் பொருள் ஆவி அனைத்தையும்
எம் விடிவிற்காக, அக்கினியில் குளித்து விட்டு
காற்றினில் துயில் கொள்ளும் தூயவர்கள்

எம் மூச்சுக்காற்றிலும் பேசும் மொழியிலும்
வாழும் சந்தனத் தேகங்களின்
செந்தமிழ் தாகங்கள்

இந்த அற்புதமான புனிதர்களின்
பாதங்களை நோக்கி, தமிழர் அனைவரும்
ஒருகணம் எண்ணி வணங்கும்
ஈகத்தின் திருநாளே ஜூலை 5 எனும்
பெருநாள்.

ம.ஆன்சிலின்

## ஒளி தரும் அமாவாசைகள்

நீங்கள் அமாவாசையாகிப் போன கரிய ~நிலவுகள்
ஆயினும் அர்த்த ராத்திரியில் உதித்த~ஞாயிறுகள்
அமாவாசையாகினால் என்ன; அடுத்தது~ஆனந்தமான பூரணை
நீங்களும் அப்படியான பூரணை நிலவுகளாகவே
திகழ்கின்றீர்கள்

அரக்க சிங்கள இராணுவத்தால்
~அராஜகவெறியர்களால்
அடிமை எனும் இருளில் மூழ்கிவிடிவை
~நோக்கிய எம்மினத்துக்கு
பிறையாகி ஒளி தரும் அமாவாசைகள் நீங்களே
மறையாத மலர்களாய் சிரிக்கின்றீர் வானிலே


எதிரியின் எண்ணற்ற போர்க்கலங்கள்
~விமானங்கள்
பல்குழல் எறிகணைச் செலுத்திகள் பல்வேறு
~படையணிகள்
உம் உயிராயுதத்தின் முன்னால் அவையாவும்~தூசு
எம் ஈழக்காற்றே அதை பெயர் சொல்லி~வீசு

ஆயுதக் கண்டுபிடிப்பில் ஆய்வுகள் ஆயிரம்
அதனால் அழியும் நிதியும் பல்லாயிரம்
உம் போன்ற உயிர் ஆயுதத்தின் விலை~என்ன?
எம் மண்ணும் விண்ணும் ஈடாகா உமக்கு

பயம் என்ற தடையை உடைத்து இலட்சியப்
~ போர்க்கலம் ஏந்தி
ஈழம் படைக்கும் ஈகையாளர் நீங்களும் ~
அமாவாசைகளே
நாளை ஒளி தரும் பூரணைகளே

வ.மேனகா
கிளி/புனித திரேசா பெண்கள் கல்லூரி

## காற்றோடும் கடலோடும்...



கரு விழிகொண்டு
கயவனின் குகை சென்று
களம் பல தான் கண்டு
களத்தினில் பகை வென்று
காவியமான எம்
கரிய புலி வீரர்களே
தமிழன்
கருவறையிலும்
கல்லறையிலும்
மலரும் மாவீரர்களே
ஒவ்வொரு தமிழன்
உள்ளவரைக்கும் அவன்
உள்ளம் வரைக்கும்
ஊடுருவிச் சென்ற
உயிர்ப் பூக்களே
அச்சமின்றி எதிரியை
மிச்சமின்றி அழித்து–உயிரை
துச்சமின்றி வெடித்து
விதையாகி விழுதாகிய–வீர
மான மறவர்களே
காற்றோடும் கடலோடும்
அலையோடும்
சங்கமமாகி மங்காத புகழை
மண்ணிற்காய் சூட்டிய–தமிழ்
மண்ணின் மைந்தர்களே
நீங்காத உம் புகழை நிலையாக்கி
நித்தமும் எம் நெஞ்சினில் நினைவாக்கி
நிழல்களாக வாழ்கின்ற–
நாளைய விடுதலையின் வேர்களே
மலரும் ஈழமதில்–உங்கள்
புன்னகைகள் பூத்திருக்கும்.

தே.நளா

# நிவாரணம், புனர்வாழ்வு, நல்லிணக்க அமைச்சு

## வடக்கு கிழக்கு மாகாண சபை

## போரினால் பாதிக்கப்பட்ட பிரதேச புனரமைப்புத் திட்டம் (காரப்)

## நிதி-ஆசிய அபிவிருத்தி வங்கி

## ஆஅவ கடன் இல:-2043-சிறீ (எஸ்எவ்)

# கேள்வி அறிவித்தல் இல:45

## குடிசார் வேலைகளைப் பெறுதல்

1. போரினால் பாதிக்கப்பட்ட பிரதேச புனரமைப்புத் திட்டத்தின் (CAARP) ஆகுசெலவு சார்பாகப் பலதரப்பட்ட நாணயங்களில் ஆசிய அபிவிருத்தி வங்கியிலிருந்து ("ஆ.அ.வ") கடனொன்றை இலங்கை அரசாங்கம் பெற்றுள்ளதுடன், கீழேயுள்ள அட்டவணையில் விபரிக்கப்பட்டுள்ள நிர்மாண வேலைகளுக்கான ஒப்பந்தங்களின் கீழ் தகுதிவாய்ந்த கொடுப்பனவுகளுக்கு இக்கடனின் வரும்படிகளின் பகுதி பிரயோகிக்கப்பட உத்தேசிக்கப்பட்டுள்ளது.

2. இதன் பின்னால் தொழில்தருநராக குறிப்பிடப்படும் NECORD திட்டக் கேள்விச் சபைத் தலைவரால் பின்வரும் வேலைகளுக்கு தகுதிவாய்ந்த ஒப்பந்தக்காரரிடமிருந்துபொறிவைக்கப்பட்ட கேள்விகள் கோரப்படுகின்றன.

***அட்டவணை***

| தொ இல. | ஒப்பந்த இனங்காட்டல் இல. | ஒப்பந்தத்தின் பெயர் | ஆக குறைந்த ICTAD பதிவு | கேள்விப் பிணைப் பணம் (ரூபா) |
|---|---|---|---|---|
| 01 | MU/CAARP/RD/01 | ஒட்டுசுட்டான் புதுக்குடியிருப்பு மாத்தளன் வீதியில் கிரவல் நிரப்புதலும் இரட்டைத்தார் மேற்பூச்சிடுதலும். (0கி.மீ -3 கி.மீ) | M6பெருந்தெருக்கள் | 85,000/= |

3. பின்வரும் தகுதிகளைக் கொண்டுள்ளதாக விளங்கும் உறுதியான நோக்கமுடைய சகல ஒப்பந்தக்காரர்களும் கேள்வி கோருவதற்குத் தகுதியுடையவர்கள்.

I. நிர்மாணப் பயிற்சி, அபிவிருத்தி நிறுவனத்தினால் (ICTAD) விருத்தி செய்யப்பட்ட தேசிய நிருமாண ஒப்பந்தக்காரர் பதிவு, தரப்படுத்தல் திட்டத்தின் கீழ் மேற்படி அட்டவணையில் குறித்துரைக்கப்பட்ட தரமொன்றில் ஒப்பந்தக்காரராகப் பதிவு செய்யப்பட்டிருத்தல் வேண்டும்.

II. இலங்கை தேசிய நிர்மாண ஒப்பந்தக்காரர் சங்கத்தின் (இ.தே.நி.ஒ.ச.) உறுப்பினராக (ICTAD டுடன் M7 க்கு மேல் பதிவு செய்தவர்களுக்கு மட்டும் ) விளங்க வேண்டும்.

III. கடந்த ஐந்து வருடங்களினுள் ஆகக் குறைந்தது ஒத்ததன்மையிலான இரு ஒப்பந்தங்களைத் திருப்திகரமாக முடித்ததுடன், மேற்கொள்ளப்பட்ட வேலைகளில் திருப்திகரமான சாதனையைக் கொண்டிருத்தல் வேண்டும்.இது வாடிக்கையாளர்களிடமிருந்தோ அல்லது உசாவலர்களிடமிருந்தோ பெறப்பட்ட திருப்திகரமான சான்றுப்பத்திரங்களின் மூலம் உறுதிப்படுத்தப்பட வேண்டும். இக் காலத்தின் போது மேற்கொள்ளப்பட்ட சகல வேலைகளினதும் முழு நிரலொன்று வழங்குமாறு கேள்வி கோருவோர் வேண்டப்படுகின்றனர்.

IV. "ICTAD" வழிகாட்டல் முறைகளின் பிரகாரம் கணக்கிடப்பட்டவாறு வேலையைப் பொறுப்பேற்றவர் போதியளவு ஒப்பந்த ஆற்றலளவைக் கொண்டிருக்க வேண்டும்.

V. ஒப்பந்தக்காரர் மோசடியான, அல்லது வஞ்சனையான நடவடிக்கைகளுக்கு, அல்லது திருப்திகரமற்ற வேலைச் செயற்றிறனுக்கு தகுதியற்றவர் என்ற பிரகடனத்தின் கீழ் அடங்கலாகாது.

VI. கேள்வி ஆவணங்கள் வழங்கப்படுவதற்கு முன் ஒப்பந்தக்காரரின் புதுப்பிக்கப்பட்ட பதிவுப் புத்தகத்தை சமர்ப்பிக்கக்கூடியவராக இருக்க வேண்டும்.

4. ஏதாவது ஒப்பந்தக்காரருக்கு அனுமதிக்கப்படும் ஆகக்கூடுதலான ஒப்பந்தங்களின் எண்ணிக்கை தற்போது மேற்கொள்ளப்பட்டுவரும் CAARP வேலை அடங்கலாக மூன்றுக்கு மேற்படலாகாது.

5. ஆர்வமுள்ள தகுதிவாய்ந்த கேள்விகோருவோர் கேள்வி தொடர்பான மேலதிக தகவல்களை 55, கந்தசுவாமி கோவில் வீதி, திருகோணமலையில் பெற்றுக்கொள்ளலாம். **(தொலைபேசி: 026-2227434. /பக்ஸ் :026-2227401. இணையத்தள முகவரி: www.necord.org ஈமெயில்: necord@sltnet.lk )**

6. கேள்வி ஆவணங்களை **04.07.2005** இலிருந்து **18.07.2005** வரை **காலை 9.30** இலிருந்து **மாலை 3.00** வரை வேலை நாட்களில் மேற்படி அலுவலகத்திலிருந்து மீளளிக்கப்படாத கட்டணத்தின் கொடுப்பனவு ரூபா **1000/-** ஐச் செலுத்திப் பெற்றுக் கொள்ளலாம்.

7. இரு பொறிவைக்கப்பட்ட உறைகளில் தனியாகச் சமர்ப்பிக்கப்பட்டுள்ள விலையிடப்பட்ட கேள்வியையும், கேள்விகோருவோரின் முன் தகுதிக்கு அவசியமான ஆவணத்தையும் கேள்விகள் கொண்டிருக்க வேண்டும் என்பதுடன், இதன் தொடர்பாக பந்தி 7 இல் குறிப்பிட்டுள்ள இடம், திகதி மற்றும் நேரம் ஆகியவற்றுக்கு ஏற்ப ஒப்படைக்கப்பட வேண்டும்.

8. பொறிவைத்த கேள்விகள் யாவும் **தலைவர், திட்ட கேள்விச்சபை, "நீகோட்", 55, கந்தசுவாமி கோவில் வீதி, திருகோணமலை** என்ற விலாசமிடப்பட்டு, 25.07.2005 பி.ப. 2.00 மணிக்கு முன்பதாக கிடைக்க வேண்டும். இதன் பின்னர் உடனடியாக கேள்விகள் திறக்கப்படும். அப்பொழுது கேள்விதாரர்கள் அல்லது அவர்களது அங்கீகரிக்கப்பட்ட பிரதிநிதிகள் சமுகமளிக்க முடியும்.

9. முன்கூட்டியே கேள்வி கோரல் பற்றிய கூட்டமொன்று எமது அலுவலகத்தில் **18.07.2005** ஆந் திகதி அன்று பி.ப. **2.00** க்கு நடைபெறும்.

10. கேள்விகள் தயாரிப்புக்கு அல்லது ஒப்படைப்புக்கு கேள்விகோருவோருக்கு ஏற்படும் ஏதாவது ஆகுசெலவுகளுக்கு அல்லது செலவீனங்களுக்கு தொழில்தருநர் பொறுப்பாகமாட்டார்.

***த. லங்காநேசன்,***
***தலைவர், கேள்விச்சபை,***
***நீகோட் திட்டம்,***
***55, கந்தசுவாமி கோவில் வீதி,***
***திருகோணமலை.***

(சி.12274)

## முதலைகளால் ஆபத்து!

(வட்டக்கச்சி)

வட்டக்கச்சி பிரதான வாய்க்காலில் கடந்த சில தினங் களாக முதலைகளின் நடமாட்டம் அதிகரித்து காணப்படுகின்றது. தற்போது பிரதான வாய்க்காலில் அதிகளவு நீர் பாய்வதனால் முதலைகளின் நடமாட்டம் அதிகரிக்கத்தொடங்கி விட்டது.

கடந்த வாரத்தில் வாய்க்கால் கரைகளில் உணவுதேடிப் போகும் கோழிகள், ஆட்டுக்குட்டி போன்றவையை இழுத்துச் சென்றதாகவும் தகவல்கள் வெளிவருகின்றன. எனவே இவ்விடயத்தை பெரியவர்கள் கவனத்தில் எடுத்து பிரதான வாய்க்காலில் சிறார்கள் நீராடுவதை தவிர்த்துக் கொள்ளும்படி வேண்டப்படுகின்றது. (12)

## மாரடைப்பால் மரணம்

(முல்லை)

பேய்த்தாளை வாழைச்சேனையிலிருந்து கடற்றொழிலுக்காக அளம்பில் துண்டாய்ப்பகுதிக்கு வந்த நாகராசா என்பவர் மாரடைப்பால் மரணமானார்.

நெஞ்சுவலி எனக்கூறியபோது மேற்படி நபர் முல்லை.வைத்திய சாலையில் அனுமதிக்கப்பட்ட போதே அங்கு மரணமடைந்துள்ளார்.

இவரது மரணம் தொடர்பான விசாரணையை முல்லைத்தீவு காவல்துறையினரும், திடீர் மரண விசாரணை அதிகாரி தியாகராஜாவும் மேற்கொண்டபோது திடீர் மரண விசாரணை அதிகாரி மாரடைப்பினால் ஏற்பட்ட மரணம் எனத் தீர்ப்பு வழங்கியுள்ளார்.

இதனையடுத்து அவரது சடலம் அவரது மைத்துனரான செ.மனோகரனிடம் ஒப்படைக்கப்பட்டு சொந்த ஊருக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளது. (20)

## திட்ட முகாமைத்துவம் தொடர்பாக பொ.மதியுரையகத்தில் பயிற்சிப்பட்டறை

இலண்டன் சஸ்ரேயின் நிறுவனத்தின் அனுசரணையுடன் பொருண்மிய மதியுரையகத்தில் கடந்த சனிக்கிழமை முற்பகல் 10.30 மணியளவில் திட்ட முகாமைத்துவம் தொடர்பான பயிற்சிப் பட்டறை ஆரம்பித்து வைக்கப்பட்டது.

இப்பயிற்சிப்பட்டறைக்கு த.பிரதாப் தலைமை தாங்கினார். முதல் நிகழ்வாக ஈகச்சுடரினை சஸ்ரேயன் பணிப்பாளர் செல்வி. எலிசாமான் ஏற்றி வைத்தார். தமிழீழ தேசியக்கொடியினை பொருண்மிய மதியுரையக நிறைவேற்றுப் பணிப்பாளர் சுகுணன் ஏற்றிவைத்தார். அதனைத் தொடர்ந்து இரண்டு நிமிட அகவணக்கம் இடம்பெற்றது. அதனை அடுத்து மங்கல விளக்கேற்றல் இடம்பெற்றது.

சஸ்ரேயன் நிறுவனமும், அதன் செயற்பாடுகள் பற்றி சஸ்ரேயன் பணிப்பாளர் செல்வி. எலிசாமான் கருத்துரை வழங்கினார். அடுத்து சஸ்ரேயன் பிரதிநிதிகளான செல்வன் சசி, செல்வி. அமீரா முகாமைத்துவமும் கண்காணிப்பும் பற்றிய விளக்கங்களைப் பயனாளிகளிற்கு கொடுத்தனர். இதனைத் தொடர்ந்து பயிற்சிப்பட்டறைக்கு வந்த பயனாளிகளை ஆறு குழுக்களாகப் பிரித்து முகாமைத்துவம் தொடர்பாக குழுநிலைக் கலந்துரையாடல் இடம்பெற்றது. குழுநிலை பற்றிய கலந்துரையாடலை குழுத்தலைவர்கள் சஸ்ரேயன் பணிப்பாளரிடம் சமர்ப்பித்தனர். தொடர்ந்து திட்டமுகாமைத்துவம் தொடர்பான விளக்கம் வழங்கப்பட்டது.

# கரும்புலிகள் நாள்

2005 ஜூலை 05



சாவிலும் உயிர்த்து
சரித்திரம் படைக்கும்
தன்னிகரில்லாக்
கரும்புலி வீரர்...
தாளினைத்தொழுவோம்
தமிழராய் நிமிர்வோம்!
தாயகம் மீட்க – அவர்
தடங்களைத்தொடர்வோம்!

## 12 ஆவது ஆண்டில் 12 ஆவது கிளை பரந்தனில்

இன்று முதல்

உங்கள் நம்பிக்கையின் சின்னம்

பன்முகப்படுத்தப்பட்ட
வைப்புத்திட்டங்கள்
கடன்திட்டங்கள்
வைப்பகத்தின் ஏனைய பணிகள்
என்பனவற்றுடன்
மக்கள் நலன்கருதி
எங்களின் மண்ணின் வளமும்
நலனும் பேண
உறுதிபூண்டு நிற்கிறது.

## தமிழீழ வைப்பகம்

தமிழீழ வைப்பகம்
தமிழரின் காப்பகம்

## அகில இலங்கை உதைபந்தாட்ட அணியில் இணைந்து கொள்வதற்கான முதற்கட்டத் தேர்வு

அகில இலங்கை உதைபந்தாட்ட அணியில் இணைந்துகொள்வதற்கான முதற்கட்டத்தேர்வுகள் எதிர்வரும் ஒன்பதாம், பத்தாம் திகதிகளில் யாழ்ப்பாணம் துரையப்பா விளையாட்டரங்கில் காலை எட்டு மணிக்கு ஆரம்பமாகவுள்ளது. இலங்கை அணிப்பயிற்றுனர் சம்பத் பெரேராவினால் நடத்தப்படும் இம் முதற்கட்டத் தேர்வுகளில் இணைந்து கொள்ளவிரும்புவோர் உதைபந்தாட்ட காலணி மற்றும் உதைபந்தாட்ட உடைகளுடன் காலை 7.45 மணிக்கு துரையப்பா விளையாட்டரங்கில் சமுகமளிக்கும்படி வேண்டப்படுகிறனர்.

இதேபோன்று இளநிலை அணித் தேர்வுக்கு சமுகமளிக்க விரும்பும்.20வயதுக்குட்பட்ட இளைஞர்களும் அன்றையதினம் சமுகமளிக்கும் வண்ணம் வேண்டப்பட்டுள்ளதுடன் தேர்வு செய்யப்படுபவர்கள் கொழும்பில் தொடர்பயிற்சியைப் பெற்றுக்கொள்ள அழைக்கப்படுவார்கள் என கிளிநொச்சி மாவட்ட உதைபந்தாட்ட லீக் செயலாளர் சு.கனகராசா தெரிவித்துள்ளார். (சோ)

## இங்கிலாந்து சிறந்த அணியாக விளங்க ஹார்மிசனே காரணம் பாராட்டுகிறார் மெக்ராத்



கடந்த 18 மாதங்களில் இங்கிலாந்து கிரிக்கெட் அணி சிறந்து விளங்க அவ்வணியின்வேகப்பந் வீச்சாளரான ஹார்மிசனே காரணம் என அவுஸ்திரேலிய கப்பந்து வீச்சாளரான கிளன் மெக்ராத் பாராட்டுத்தெரிவித்

இறுதியாக நடைபெற்று சமநிலையில் மு போட்டியில் ஹார்மிசன் மூன்று விக்கெட்டுக்களை வீழ் ர்.அவரின் பந்து வீச்சே ஏனைய வீரர்களை உற்சாகப்ப துவதாகத் தெரிவித்துள்ளார்.அவர் பற்றி மைக்கல் வோன் குறிப்பிடுகையில், தென்னாபிரிக்க அணியுடனான போட்டியின் போது சற்று வீழ்ச்சி கண்ட அவரது திறமை படிப்படியாக வளர்ச்சி கண்டு வருவதாகவும் இந்தத் தொடர் முழுவதும் அவரின் திறமை வெளிப்பட்டுள்ளதாகவும் கூறியுள்ளார்.


## முன்பள்ளி விளையாட்டு விழா

தமிழர் புனர்வாழ்வுக்கழகத்தின் அனுசரணையுடன் முல்லை அகதிகள் புனர்வாழ்வு நிறுவனத்தினால் நடைமுறைப்படுத்தப்பட்டுவரும் முள்ளியவளை நாவற்காடு சந்திரன் முன்பள்ளி விளையாட்டு விழா 29-06-2005 அன்று பிற்பகல் 3.00 மணிக்கு முன்பள்ளி மைதானத்தில் முல்லை அகதிகள் புனர்வாழ்வு நிறுவன சமூக நலத்திட்ட இணைப்பாளர் வி. லங்கா தேவி தலைமையில் நடைபெற்றது. (ஆ)

□ □ □

தமிழர் புனர்வாழ்வுக் கழகத்தின் அனுசரணையுடன் முன்பள்ளி கல்வி மேம்பாட்டு நிலையமும், முல்லை அகதிகள் புனர்வாழ்வுக் கழகமும் இணைந்து நடைமுறைப்படுத்திவரும் பொன்நகர் சந் திரன் முன்பள்ளி விளையாட்டு விழா கடந்த முதலாம் திகதி பிற்பகல் மூன்று மணிக்கு முல்லை அகதிகள் புனர்வாழ்வுக் கழக சமூகநல திட்ட இணைப்பாளர் திரு மதி வி. லங்காதேவி தலைமையில் ஆரம்பமாகி சிறப்பாக நடைபெற்றது. (ஆ)

## விம்பிள்டன் டென்னிஸ் பெடரர் ஹார்ட்ரிக் சாதனை



விம்பிள்டன் டென்னிஸ் போட்டியில் ஆண்கள் பிரிவில் ரோஜர் பெடரர் மூன்றாவது தடவையாக சம்பியன் பட்டம் வென்றார்.

நேற்று முன்தினம் ஆண்கள் பிரிவு ஒ ர் இறுதிப் போட்டி நடந்தது. இதில் உலகின் முதல்நிலை வீரரான ரோஜர் பெடரரும் (சுவிட்சர்லாந்து), உலகின் இரண்டாம் நிலை வீரர் ஆண்டி ரொடிக்கும் (அமெரிக்கா) மோதினார்கள்.

23 வயது வீரரான பெடரர் ஏற்கனவே 2003, 2004 ஆகிய இரு ஆண்டுகளும் விம்பிள்டன் சம்பியன் பட்டத்தை வென்றவர். எனவே, எப்படியாவது இந்தப் போட்டியிலும் வென்று மூன்றாவது முறை சம்பியன் ஆகிவிடவேண்டும், ஹாட்ரிக் அடித்துவிட வேண்டும் என்கிற ஆவேசத்தோடு விளையாடினார். அவருடைய ஆசை நிறைவேறியது.

பெடரர் 6-7, 7-6, (7-2), 6-4 என்கிற நேர் செட் கணக்கில் வெற்றிபெற்று சம்பியன் ஆனார். மூன்றாவது தடவை தொடர்ந்து சம்பியன் பட்டத்தை வென்று விம்பிள்டனில் ஹாட்ரிக் அடித்துவிட்டார். ஏற்கனவே இதுபோல் பீட்சாம் ரஸ், பிஜான் போர்க் ஆகிய இரு வீரர்கள் விம்பிள்டனில் ஹாட்ரிக் சம்பியன் ஆகியுள்ளனர். மூன்றாவது ஆளாக இந்த சாதனைப் பட்டியலில் பெடரர் சேர்ந்துள்ளார்.



நெதர்லாந்தில் உள்ள உட்ரெக்ட் நகரில் நடந்த உலக 20 வயதிற்குட்பட்டோருக்கான கால்பந்து இறுதிப்போட்டியில் ஆர்ஜென்டீனா 2-1 என்ற கோல் கணக்கில் நைஜீரியாவை வீழ்த்தியது. கோப்பையுடன் ஆர்ஜென்டீனா அணித்தலைவர் பாப்லோ ஜபேலெட்டா மற்றும் வீரர்கள்.




## இங்கிலாந்துக்கு எதிரான ஒரு நாள் தொடர் ஆவலுடன் எதிர்பார்த்துள்ளேன் - பொண்டிங்

இங்கிலாந்துக்கு எதிரான ஒரு நாள் தொடரை ஆவலுடன் எதிர்பார்த்திருப்பதாக அவுஸ்திரேலிய அணித் தலைவர் ரிக்கி பொண்டிங் தெரிவித்துள்ளார்.


இங்கிலாந்து சென்றுள்ள அவுஸ்திரேலிய அணி முத்தரப்பு மற்றும் மூன்று போட்டிகள் கொண்ட ஒரு நாள் தொடரில் பங்கேற்கிறது. முத்தரப்புத் தொடரின் இறுதிப்போட்டி லண்டன் லோர்ட்ஸ் மைதானத்தில் கடந்த சனியன்று நடந்தது. இப்போட்டியில் உச்சக்கட்ட விறுவிறுப்பை பார்க்க முடிந்தது. முதலில் ஆடிய அவுஸ்திரேலியா 48.5 ஓவர்களில் 196 ஓட்டம் எடுத்தது. ஹுசே 62 ஓட்டம் எடுத்தார். அடுத்து களமிறங்கிய இங்கிலாந்து அணிக்கு மெக்ராத், பிரெட்லீ கடும் நெருக்கடி கொடுத்தனர். இதனால் 33 ஓட்டங்களுக்கு ஐந்து விக்கெட்டுக்களை இழந்து தவித்தது இங்கிலாந்து.

இந்நிலையில், விக்கெட் காப்பாளர் ஜெரைன்ட் ஜோன்ஸ்(71) கொலிங்வூட் (53) ஜோடி 116 ஓட்டங்கள் சேர்க்க இங்கிலாந்து அணி வெற்றி இலக்கை நெருங்கியது. கடைசி ஒரு ஓவர், 10 ஓட்டம் எடுத்தால் வெற்றி என்ற விறுவிறுப்பான கட்டத்தில் மெக்ராத் பந்து வீச இங்கிலாந்து வீரர்கள் ஒன்பது ஓட்டம் எடுத்தனர். இதனால் இங்கிலாந்து அணியும் 50 ஓவரில் 196 ஓட்டம் எடுக்க ஆட்டம் சமனிலையில் முடிந்தது. சம்பியன் கோப்பை இரு அணிகளுக்கும் பகிர்ந்தளிக்கப்பட்டது. இந்த முடிவு அவுஸ்திரேலியாவுக்கு கடும் நெருக்கடியை ஏற்படுத்தியுள்ளது.

இதற்கு அடுத்ததாக நடக்கவுள்ள ஒரு நாள் தொடரில் பதிலடி தருவதாக அவுஸ்திரேலிய தலைவர் பொண்டிங் கூறியுள்ளார்.

லோர்ட்ஸ் மைதானத்தில் 196 ஓட்ட இலக்கு என்பது கடினமானது. தொடக்கத்தில் இங்கிலாந்து அணி ஐந்து விக்கெட்டுக்களை இழந்தும் வெற்றி கிடைத்துவிடும் என எதிர்பார்த்தேன். ஆனால், ஜோன்ஸ் கொலிங்வூட் ஆட்டத்தின் முடிவை மாற்றிவிட்டனர்.

இதில் வெற்றிபெறாதது ஏமாற்றம் அளிக்கிறது. ஆனாலும், கிரிக்



கெட் வரலாற்றில் இது ஒரு மகத்தான போட்டி. சுவாரஸ்யமான ஆட்டங்களில் இப்போட்டியும் ஒன்று. அடுத்ததாக நடக்கவுள்ள ஒரு நாள் தொடரை ஆவலுடன் எதிர்பார்த்துள்ளேன். முத்தரப்பு தொடரில் இங்கிலாந்திடம் பெற்ற தோல்விகளுக்குப் பதிலடி கொடுக்கக் காத்திருக்கின்றோம் என்றார்.



விம்பிள்டன் கலப்பு இரட்டையர் பிரிவில் மகேஷ் பூபதி -மேரி பியர்ஸ் ஜோடி சம்பியன் பட்டம் வென்றது. இந்த ஜோடி பால் ஹென்லி - டாட்டியானா பெர்ரிபினிஸ் ஜோடியை 6-4,6-2என்ற செட்கணக்கில் வீழ்த்தி சம்பியன் பட்டம் வென்றது.


## ஆஷஸ் தொடர் பீற்றர்சன் பங்கேற்க வாய்ப்பு அதிகம்





எதிர்வரும் 21ஆம் திகதி ஆரம்பமாகவுள்ள இங்கிலாந்து அவுஸ்திரேலிய அணிகள் பங்கேற்கும் ஆஷஸ் கிண்ண டெஸ்ட் கிரிக்கெட் போட்டியில் இங்கிலாந்து அணியில் கெவின் பீற்றர்சன் பங்கேற்கும் வாய்ப்பு அதிகமிருப்பதாக தேர்வுக்குழுத் தலைவர் டேவிட் கிறேவ்னி தெரிவித்துள்ளார். எனினும் இத்தொடர் தனது 100ஆவது போட்டி என்பதால் கிரஹம் தோப்பும் அணியில் இடம்பிடிக்க போராடி வருகின்றார் எனத் தெரிவிக்கப்படுகிறது. கிரவ்னி குறிப்பிடும்போது பீற்றர்சன் அண்மைய போட்டிகளில் காட்டிய திறமை அவருக்கு எந்தத் தடையையும் ஏற்படுத்தாது எனத் தெரிவித்துள்ளார். எனினும் தற்போது அணியில் பங்குபற்றும் இயன்பெல் தனது இடத்தைப் பாதுகாத்துக்கொள்வார் எனக் கூறினார்.எனினும் அவுஸ்திரேலியாவுடனான ஒருநாள் போட்டியில் 91 ஓட்டங்களை ஆட்டமிழக்காது பெற்றாலும் அதன்பின்னர் அவரது ஆட்டம் சோபிக்கவில்லை. தோப்பைப் பொறுத்தவரை அவர் ஒருநாள் போட்டிகளிலிருந்து ஓய்வு பெற்றாலும் கவுண்டி போட்டிகளில் பங்கேற்றுவருகிறார். அவர் ஆஷஸ் தொடரில் விளையாடலாம் என்று எதிர்ப்பார்க்கப்படுகிறது.

## கொரிய அணியிடம் இந்தியா தோல்வி உலகக் கோப்பை வாய்ப்பை இழந்தது



கொரிய அணியிடம் ஏற்பட்ட தோல்வியால் உலகக்கோப்பை கரப்பந்து போட்டியில் கலந்துகொள்ளும் தகுதியை இழந்தது இந்தியா.சென்னை நேரு உள்விளையாட்டு அரங்கில் உலகக்கோப்பை கரப்பந்து தகுதிச்சுற்றுப்போட்டிகள் நடைபெற்று வந்தன.நேற்று முன்தினம் கடைசி ஆட்டம் நடந்தது இதில் இந்திய-கொரிய அணிகள் மோதின. உலக தர வரிசையில் கொரியா பத்தாவது இடத்திலும், இந்தியா 26ஆவது இடத்திலும் உள்ள அணிகள் ஆகும்.ஆனாலும் பலம் வாய்ந்த கொரியாவுக்கு நேற்று முன்தினம் இந்தியா ஈடுகொடுத்து ஆடியது.ஆட்டம் மிகவும் விறுவிறுப்பாக இருந்தது. என்றாலும் திறமை படைத்த கொரிய அணி கடைசியில் 3-2 கணக்கில் வெற்றி பெற்றது.

## பெங்களூர் பயிற்சி முகாமில் இணைகிறார் - கங்குலி




இங்கிலாந்து கவுண்டி கிரிக்கெட்டை முடித்துக்கொண்டு கங்குலி விரைவில் பெங்களூரில் நடக்கும் பயிற்சி முகாமில் பங்கேற்கிறார்.

பயிற்சியாளர் கிரேக் சப்பல் பிசியோ குளோஸ்டர் ஆகியோர் முன்நின்று கிரிக்கெட் வீரர்கள் பயிற்சி பெறுவதை கண்காணித்து வருகிறார்கள் இந்திய தலைவர் கங்குலி பந்துவீச்சாளர் இர்பான்பதான், ஹர்பஜன்சிங் ஆகியோர் இதுவரை இங்கிலாந்து கவுண்டி கிரிக்கெட் போட்டிகளில் விளையாடி வந்தனர். எனவே அவர்கள் பெங்களூர் பயிற்சி முகாமுக்கு வரவில்லை அவர்களுக்கு விதிவிலக்கு அளிக்கப்பட்டிருந்தது.

இப்போது இங்கிலாந்தில் கவுண்டி கிரிக்கெட் போட்டிகள் முடியும் கட்டத்தை நெருங்கியுள்ளன. எனவே இந்திய வீரர்கள் விரைவில் நாடு திரும்புகிறார்கள். உடனடியாக பெங்களூருக்கு வந்து பயிற்சி முகாமில் கலந்துகொள்ள இருக்கிறார்கள்.

யாழ்ப்பாணம்


## சிந்தனைக்கு



இது கரும்புலிகள் சகாப்தம்; இடியும் மின்னலுமாகப் புலிகள் போர்க்கோலம் பூண்டுவிட்ட காலம். இந்தப் புதியயுகத்தில் எமது போராட்டம் புதிய பரிமாணங்களில் விரியும்; சாவுக்கு விலங்கிட்ட மறவர்கள் புதிய சரித்திரம் படைப்பார்கள்; எமது சந்ததியின் விடிவுக்கு விளக்கேற்றி வைப்பார்கள்.

தமிழீழதேசியத்தலைவர்.

ஈழநாதம்
மக்கள் நாளிதழ்
யாழ்.சாலை,கிளிநொச்சி. 05-07-2005
தொலைபேசி 060-2213244
தொலைநகல் 021-2283948
மின் அஞ்சல் natham23 ela@ yahoo.com

# தனித்துவமானவர்கள்!

தமிழீழ விடுதலைப் போரில் வீரகாவியமான கரும்புலிகளை தமிழர் தாயகம் இன்று நினைவுகூரும் நாள். வருடம்தோறும் யூலை–05ஆம் நாள் தமது இன்னுயிரை தமது மண்ணிற்காகவும், மக்களுக்காகவும் ஈகம் செய்த கரும்புலிகளை தமிழ்மக்கள் நினைவு கூர்ந்து அவர்களுக்கு அஞ்சலியைச் செலுத்துவதை மரபாக்கிக்கொண்டுள்ளனர்.

1987ஆம் ஆண்டு யூலை மாதம் –05ஆம் திகதி முதல் கரும்புலியாகி கப்டன் மில்லர் தன்னுயிரை நாட்டிற்காக ஈகம் செய்தார். இதன் பின்னர் ஆண், பெண் என நூற்றுக்கணக்கான கரும்புலிகள் தரையிலும், கடலிலுமாக தம் உயிரை ஈகம் செய்துள்ளனர். இவ்வாறு ஈகம் செய்த கரும்புலிகளின் வரலாறு ஒட்டுமொத்தமாகத் தமிழீழத் தேசியத்தின் விடிவிற்கான வரலாறாக இருப்பினும், உறுதி, அர்ப்பணிப்பு, ஈகம் என்பனவற்றின் அடிப்படையில் அவை ஒவ்வொன்றும் தனித்துவமான வரலாறாகும்.

கரும்புலிகளின் வரலாறு ஒவ்வொன்றும் ஈழப்போராட்ட வரலாற்றின் ஒவ்வொரு படிநிலையாகவும், திருப்புமுனையாகவும், மைல்கல்லாகவும் இருந்துள்ளது எனக் கூறின் மிகையாகாது. இந்த வகையில் தமிழீழ விடுதலைப் போராட்ட வரலாற்றின்ஆற்றல் மிகு போர் வடிவமாக இவ் உயிராயுதம் உள்ளது.

கடந்த இரு தசாப்த விடுதலைப் போரியல் வரலாற்றில் சிறிலங்கா இராணுவத்தரப்பு பெரும் தோல்வியைச் சந்தித்த ஒவ்வொரு சந்தர்ப்பத்திலும் கரும்புலிகளின் பங்கு காத்திரமானதாகவே இருந்துள்ளது. சிறிலங்கா படைத்தரப்பிற்கு பல பெரும் தோல்விகளை கரும்புலிகள் தனித்தே கொடுத்துள்ளனர். சிறிலங்காசந்தித்த பெரும் தோல்விகள் சிலவற்றில் கரும்புலிகள் முழுஅளவில் பங்களிக்காது போனாலும் அவர்களின் பங்கு பெருமளவிலானதாகவும் இருந்துள்ளது.

ஆனால், சிறிலங்கா படைத்தரப்பு தனது ஒவ்வொரு தோல்வியின் பின்பும் தனது ஆயுத தளபாடப் பற்றாக்குறை, ஆயுதப் படைத் தரப்பை நவீனப்படுத்துதல் என்பன பற்றிப் பேசுவதுண்டு. அதற்கு ஏற்றாற் போல் பலஆயிரம் கோடி ரூபா செலவில் ஆயுத பலத்தைப் பெருக்குவதோடு, நவீனப்படுத்துவதும் உண்டு. அவற்றோடு இராணுவக் கட்டமைப்பையும் மாற்றியமைப்பதுமுண்டு.

சிறிலங்கா ஆயுதப் படைத்தரப்பு எவ்வாறு தன்னை நவீனப்படுத்திக் கொண்டாலும், கரும்புலிகளை அவர்களால் தடுத்து நிறுத்திவிட முடியவில்லை. வேறுவிதமாகக் கூறுவதானால், இவ் உயிராயுதங்களைத் தடுத்து நிறுத்தக்கூடியதான ஆயுதங்கள் எவற்றையும் அவர்களினால் கண்டறிய முடியவில்லை. ஆகையினால் மீண்டும் மீண்டும் கரும்புலிகள் அவர்களுக்குத் தோல்விகளைப் பரிசளிப்பவர்களாகவே இருந்தனர்.

விடுதலைப்புலிகளின் கரும்புலிகள் அணி பற்றிச் சிறிலங்கா ஆட்சியாளர்கள், ஆயுதப் படைத்தரப்பினர் கொண்டுள்ள அச்சம், பீதி என்பன மிகப்பெரிது. இது அவர்களுக்கு சும்மா ஏற்படவில்லை. அனுபவம் கொடுத்த பாடம். இதன் காரணமாக இனப்பிரச்சினைக்கு அரசியல் தீர்வொன்று காண்பதற்கு முன்பாகவே இப் படையணியைக் கலைத்துவிட வேண்டுமெனச் சிறிலங்கா ஆட்சியாளர்கள் எடுத்துக் கொண்ட முயற்சி பெரியது.

இவ்வாறு அவர்கள் அக்கறை கொண்டமைக்கு இவ்வுயிர் ஆயுதத்திற்கு எதிராக சிறிலங்கா அரசிற்கு ஆயுத விநியோகம் செய்பவர்களால்கூட ஆயுதங்களை விநியோகிக்க முடியாமலும், ஆலோசனைகளை வழங்க முடியாமலும் போனமையுமே காரணமாகும். ஆகையினால், இன்றும் சிறிலங்கா அரசிற்கு பெரும் சவால்விடும் சக்தியாக இக்கரும்புலிகள் அணிகள் உள்ளன.

உயிராயுதங்களான கரும்புலிகள்முன் ஏனைய ஆயுதங்கள் வலுவிழந்து போனமைக்குக் காரணங்கள் இல்லாமல் இல்லை. அதாவது, இவ்வுயிராயுதமானது உலோகங்களுடனான வெடிபொருளுடன் மட்டும் கூடியதொன்றல்ல. மூளையுடனும், தியாக சிந்தனைகொண்ட மனத்துடனும் கூடியதொன்றாகும்.

ஆகையினால், இவ்வுயிராயுதத்தை வெறும் ஆயுதங்களால் வெற்றி கொள்வதென்பது சாத்தியப்பாடானதொன்றல்ல. ஏனெனில், ஒடுக்குமுறையாளர்கள் ஆயுதங்களை இயக்குபவர்களைக்களமிறக்க முடியுமே ஒழிய ஆயுதமாகவே செயற்படுபவர்களைக்களமிறக்க முடியாது. மாறாக தமிழ் மக்களின் போராட்டத்திற்குத் தார்மீகப் பலம் இருக்கும் வரையில் இவ்வுயிராயுதங்கள் உருப்பெறுவதை எவரும் தடுத்துவிடவும் முடியாது.

இந்த வகையில், ஈழத் தமிழ் மக்களின் விடுதலை வரலாற்றில் போற்றுவதற்குரியவர்களாகவும், பூஜிக்கப்படுவர்களாகவும் கரும்புலிகள் இருப்பதில் ஆச்சரியப்பட எதுவுமே இல்லை. தமிழீழ விடுதலைப் போராட்ட வரலாற்றை மட்டுமல்ல, சிங்கள ஆயுதப் படையின் கறைபடிந்த வரலாற்றையும் ஆராய்பவர்களும் கரும்புலிகளின் சாதனைகளையும், தியாகங்களையும் புறம்தள்ளிவிட்டு அப்பால் சென்றுவிட முடியாது.

# விடுதலைக்காகப் போராடும் ஒரேசக்தியான புலிகள் எமக்கு வழிகாட்டியாக இருந்து உதவுகின்றனர்

## –வவுனியாவில் அரசாங்க அதிபர் சண்முகம்

(வவுனியா)

இலங்கை சுதந்திரம்பெற்ற காலத்திலிருந்து அடக்குமுறைக்குட்பட்டிருந்த தமிழினம் விடுதலை பெறப் போராடிவரும் காலகட்டத்தில் வடக்கு கிழக்கு நிர்மாணிகள் ஒன்றிணைந்துகட்டமைப்பு ஒன்றை ஏற்படுத்தியிருப்பது முக்கியமான ஒரு விடய மாகுமென வவுனியா மாவட்ட அரசாங்கஅதிபர் சண்முகம் தெரிவித்துள்ளார்.

நேற்று முன்தினம் வவுனியாவில் இடம்பெற்ற வடக்குகிழக்கு பிராந்திய நிர்மாணிகள் சங்க அங்குரார்ப்பண வைபவத்தில் பிரதமவிருந்தினராகக் கலந்து கொண்டு உரைநிகழ்த்துகையிலேயே அரசாங்க அதிபர் இவ்வாறு தெரிவித்தார்.

அடக்குமுறைக்குட்பட்ட தமிழினத்தின் விடுதலைக்கான ஒரேபோராடும் சக்தியான தமிழீழ விடுதலைப்புலிகள் எமக்கு வழிகாட்டியாக இருந்து பல்வேறு வழிகளில் உதவிபுரிகின்றனர். அவர்கள் இந்தப் பிரதேசத்தின் அபிவிருத்தியில் முக்கிய கவனம் செலுத்துகின்றனர். இதில் நிர்மாணிகள் முக்கிய பங்கு வகிக்கின்றனர்.

வடக்கு கிழக்கில் மாவட்ட ரீதியாக உருவாக்கப்பட்டிருந்த நிர்மாணிகள் சங்கங்கள் எட்டும் இன்று இணைந்து வடக்கு கிழக்கு பிராந்திய நிர்மாணிகள் சங்கத்தை உருவாக்கியுள்ளதன் மூலம் பலம் அதிகரிக்கப்பட்டுள்ளது. மேலும் இந்த நிர்மாணிகள் எதிர்கொள்ளும் பிரச்சினைகள் நெருக்கடிகளைத் தீர்பதற்கு அனைத்து நடவடிக்கைகளும் எடுக்கப்படும் என அவர் மேலும் தெரிவித்துள்ளார்.மேலும் இந் நிகழ்வில் முல்லைத்தீவு மாவட்ட அரசாங்க அதிபரின் பிரதிநிதியாகக் கலந்து கொண்ட முல்லைத்தீவு மாவட்ட பிரதித்திட்டப் பணிப்பாளர் திருமதி வில்வராசா உரையாற்றுகையில் முல்லைத்தீவு நகர் கடந்த ஆண்டளவில் ஏற்பட்ட சுனாமி பேரலையால் பாதிக்கப்பட்டு கட்டடங்கள் பூரணமாக அழிவுக்குள்ளான நிலையில் அத்தியாவசியமான சில அரசாங்க கட்டடங்களை நிர்மாணிகள் சங்கத்தினர் உடனடியாக அமைத்துத் தந்ததைப் பாராட்டியதோடு அவர்களுக்கு ஏற்படும் நெருக்கடிகளைத் தீர்த்துவைத்து அவர்களுக்கு உதவ தயாராய் இருப்பதாகக் கூறினார்.

# ஆளுநர் அலவிமௌலானாவுக்கு எதிராக வழக்கு; முன்னாள் முதலமைச்சர் நந்தனமெண்டிஸ் அறிவிப்பு

(கொழும்பு)

சிறிலங்கா சுதந்திரக் கட்சியின் செயலர் அனுமதி வழங்கினால் மேல்மாகாண ஆளுநர் அலவி மௌலானாவுக்கு எதிராக வழக்குத் தாக்கல் செய்யப்போவதாக மேல் மாகாண சபையின் முன்னாள் முதலமைச்சர் நந்தன மெண்டிஸ் தெரிவித்துள்ளார்.

மேல் மாகாண முதலமைச்சர் ரெஜினோல்ட் கூரே பதவி விலகியதன் பின்னர் நந்தன மெண்டிஸ் முதலமைச்சராக கடந்த வாரம் நியமிக்கப்பட்டார்.எனினும் 11 நாட்களில் இரண்டு பிரதான கட்சிகளின் உறுதிமொழிகளை அடுத்து மீண்டும் ரெஜினோல்ட் கூரே முதலமைச்சராக நியமிக்கப்பட்டார்.

இந்த நிலையில் கட்சியின் வேண்டுகோளுக்கு இணங்க நந்தன மெண்டிஸ் பதவியிலிருந்து விலகினார். இதே வேளை தம்மைப் பதவியில் இருந்து நீக்கியமையானது எதிர் காலத்தில் பிழையான அணுகுமுறையாக எடுத்துக்கொள்ளப்படக் கூடாது என்பதற்காகவே தாம் வழக்குத்தாக்கல் செய்ய தீர்மானித்ததாக நந்தன மெண்டிஸ் குறிப்பிட்டார்.எனினும் இந்தக் கருத்தை ஆளுநர் அலவி மௌலானா மறுத்துள்ளார்.சட்டத்தின் அடிப்படையிலேயேதாம் செயற் பட்டதாக அவர் குறிப்பிட்டுள்ளார். (32)

# ஆழிப்பேரலை நிவாரண சபையை கண்காணிக்க பாராளுமன்ற தெரிவுக்குழு

(கொழும்பு)

ஆழிப்பேரலை நிவாரண சபையின் செயற்பாடுகள் தொடர்பாக கண்காணித்து அறிக்கை சமர்ப்பிக்க பாராளுமன்ற தெரிவுக் குழுவொன்றை நியமிக்குமாறு பிரதமர் யோசனையொன்றை பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்கவுள்ளார். ஆழிப்பேரலை நிவாரண சபை சம்பந்தமாக கட்சிகளும் வெகுசன அமைப்புக்களும் பல்வேறு கருத்துக்களைத் தெரிவித்து வருவதனாலேயே பிரதமர் மகிந்த ராஜபக்ஷ பாராளுமன்ற தெரிவுக்குழு யோசனையை முன்வைக்கவுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது. இவ்விடயம் தொடர்பாக சனாதிபதி சந்திரிகா குமாரதுங்கவிற்கும் பிரதமர் விளக்கமளிக்க விருப்பதாகத் தெரியவருகிறது.

# நாட்டின் நலன் கருதிச் செயற்படவேண்டும்; ஜே.வி.பி க்கு ஹெலஉறுமய அறிவுரை!

(கொழும்பு)

நாட்டின் நலன் கருதி ஜே.வி.பி செயற்படவேண்டியது அவசியமானதாகும் என ஜாதிக ஹெல உறுமய கேட்டுள்ளது.ஜே.வி.பி யுடன் இணைந்து செயற்படுவதற்கு தாம் தயாரென ஏற்கனவே ஜாதிக ஹெல உறுமய அறிவித்திருந்தது.இதனை ஏற்றுக்கொள்ளாத ஜே.வி.பி யின் தலைவர் சோமவன்ச அமரசிங்க சிறுபான்மையினரின் உரிமைகள் தொடர்பில் ஜாதிக ஹெல உறுமயவின் கொள்கையுடன் தம்மால் இணங்க முடியாது எனக்கூறி ஜாதிகஹெல உறுமயவின் வேண்டுகோளை நிராகரித்திருந்தார்.

இந்த நிலையில் ஜே.வி.பி தலைவரின் கருத்தைக் கண்டித்துள்ள ஜாதிக ஹெல உறுமயவின் உப தலைவர் ஓமல் பே சோபித்த தேரர், ஜே.வி.பி யின் கருத்தானது தமிழீழ விடுதலைப்புலிகளின் கருத்தை ஒத்திருப்பதாகக் குறிப்பிட்டார். சிங்கள பௌத்தர்களைக் காக்கும் தமது நிலைப்பாட்டை கொண்டு தமிழீழ விடுதலைப்புலிகள் இனவாதிகள் என ஜாதிக ஹெல உறுமயவின் மீது குற்றம் சுமத்துகின்றனர். இதே வேளை ஜே வி.பி யின் கருத்தும் அதனையே ஒத்திருப் பதாக ஓமல்பேசோபித்த தேரர் குறிப்பிட்டார்.எனவே சிங்கள பௌத்தர்களைப் பாதுகாக்கும் வகையில் ஜே.வி.பியின் கொள்கை என்ன என்பதை அந்தக் கட்சி வெளியிட வேண்டும் என்றும் ஓமல்பே சோபித்த தேரர் கேட்டுள்ளார். (32)

# சனாதிபதி வேட்பாளர் யாரென சுதந்திரக்கட்சி தற்போது அறிவிக்காதாம்

(கொழும்பு)

சிறிலங்கா சுதந்திரக் கட்சியின் அடுத்த சனாதிபதிவேட்பாளர் யாரென தற்போது அறிவிப்பதில்லை என அக்கட்சி தீர்மானித்திருப்பதாக சுதந்திரக்கட்சி வட்டாரத் தகவல்கள் தெரிவிக்கின்றன.

சனாதிபதித் தேர்தல் நடைபெறும் காலப்பகுதியில் சிறிலங்கா சுதந்திரக்கட்சியின் சனாதிபதிவேட்பாளர் யாரென அக்கட்சி அறிவிக்கும் என்றும் அந்தத் தகவல்கள் மேலும் தெரிவிக்கின்றன.

இதேவேளை கருத்து பேதங்களை மறந்து ஜே.வி.பி மீண்டும் அரசாங்கத்துடன் இணையும் என சிறிலங்கா சுதந்திரக் கட்சியின் செயலாளர் மைத்திரிபால சிறிசேன தெரிவித்துள்ளார்.

ஆழிப்பேரலை நிவாரண சபை சம்பந்தமாக பிழையாகப் புரிந்து கொண்டதனால் விலகியிருக்கும் ஜே.வி.பி மீண்டும் அரசாங்கத்துடன் இணையும் என்ற எதிர்பார்ப்பு இருப்பதனால் ஜே.வி.பி யின் அமைச்சர்கள் பதவி வகித்த அமைச்சுக்களுக்கு புதிய அமைச்சர்களை நியமிப்பதில்லை என தீர்மானிக்கப்பட்டிருப்பதாகவும் மைத்திரிபால சிறிசேன குறிப்பிட்டார்.

# நீதிபதி அம்பேபிட்டிய கொலை வழக்கு; ஐந்து பேருக்கு மரணதண்டனை விதிப்

(கொழும்பு)

மேல் நீதிமன்ற நீதிபதி சரத் அம்பேபிட்டிய மற்றும் அவர் பாதுகாப்பு அதிகாரியினதும் கொலை வழக்கில் எதிரிகளான ஐந்து பேருக்கு கொழும்பு மேல் நீதிமன்றம் நேற்று மரணதண்டனை விதித்துள்ளது.

இந்த வழக்கு மூன்று மேல் நீதிமன்ற நீதிபதிகளைக் கொண்ட ரயல் அட்பார்நீதிமன்றால் விசாரிக்கப்பட்டு வந்தது. தீர்ப்பை அறிவிக்க ஆறு மணித்தியாலங்கள் சென்றன. மேல் நீதிமன்ற நீதிபதியான சரத் அம்பேபிட்டியவும் அவரது உயர்பாதுகாப்பு அதிகாரியுமான ஆர்.உப்பாலி என்பவரும் கடந்த நவம்பர் மாதம் 19 ஆம் திகதி சுட்டுக்கொல்லப்பட்டனர்.

இந்தச் சம்பவம் நீதிபதி சரத் அம்பேபிட்டியவின் வீட்டிற்கு அருகே இடம்பெற்றது. மேல்நீதிமன்ற நீதிபதி ஒருவர் கொல்லப்பட்டது இதுவே முதல் தடவையாகும்.

இரண்டு அடையாள அணிவகுப்புகளில் அடையாளம் காணப்பட்ட ஐந்து பேர் நீதிபதியின் கொலையில் பிரதான சந்தேகநபர்களாக இனங்காணப்பட்டனர். இதன் பின்னர் இந்த எதிரிகளுக்கான குற்றப்பிரதியை சட்டமா அதிபர் நீதிமன்றில் தாக்கல் செய்தார்.

வழக்கில் முதலாவது சந்தேகநபரான முகமட் நியாஸ் நவ்பருக்கு எதிரான சரத் அம்பேபிட்டிய கொலைக்குச் சூழ்ச்சி செய்தமை, ஏனையோருக்கு அனுசரணை வழங்கியமை போன்ற குற்றச்சாட்டுக்கள் சம்பந்தப்பட்டிருந்தன. இரண்டாம், மூன்றாம், நான்காம், ஐந்தாம் எதிரிகளுக்கு எதிராகக் கொலை வழக்கு,சூழ்ச்சி செய்தமை,அதன் பிரதிபலனாக அம்பேபிட்டிய, கொலை செய்யப்பட்டமை மட்டுமல்லாமல் அவரின் பாதுகாப்பு அதிகாரியைச் கொலை செய்தமை போன்ற குற்றச் சாட்டுக்கள் சுமத்தப்பட்டிருந்தன. குற்றவாளிகள் மீது சம்பந்தப்பட்டிரு ் த சகல குற்றங்களும் உண்மை யானவையெனத் தெரிவிக்கப்பட்டிருந்தது.

# திருமலை சீனன்குடாவில் இராணுவச்சிப்பாய் சுட்டுக்கொலை

(திருகோணமலை)

திருகோணமலை சீனன்குடாப் பகுதியில் சிறிலங்கா இராணுவச் சிப்பாய் ஒருவர் இனந்தெரியாதோரால் சுட்டுக்கொல்லப்பட்டுள்ளார்.

திருகோணமலை ப்ரெட்ரிக் கோட்டையின் உள் அமைந்துள்ள கஜபாகு படைப்பிரிவின் பாண்ட் வாத்தியக் குழுவைச் சேர்ந்த சுஜித பிரசன்ன என்பவரே இனந்தெரியாத நபர்களால் சீனன்குடாப்பகுதியில் தனியகம என்ற இடத்தில் நேற்றுக் காலை சுட்டுக்கொல்லப்பட்டார்.

நிகழ்ச்சி ஒன்றில் கலந்துவிட்டுத் திரும்பும் போது இந்தத் துப்பாக்கிச் சூட்டுச் சம்பவம் நடந்துள்ளது. முன்விரோதம்காரணமாக இக்கொலை நடந்திருக்கக் கூடும் என்று திருமலை சிறிலங்கா பொலிசார் சந்தேகம் கொண்டுள்ளனர்.

## பொதுக்கட்டமைப்பில்...

அழுனுகம தெரிவித்திருப்பது தொடர்பாகக் கேட்ட கேள்விக்குப் பதிலளித்த அவர் இலங்கையில் இரண்டு அதிகார மையங்கள் இருக்கின்றன. என்பதை, 2002ஆம் ஆண்டு இலங்கை அரசாங்கத்துடன் விடுதலைப் புலிகள் இயக்கம் செய்துகொண்ட போர்நிறுத்தப் புரிந்துணர்வு உடன்படிக்கையே தெளிவாக ஏற்றுக்கொள்கிறது என்று தெரிவித்திருக்கும் அவர், இந்த அடிப்படையில் நின்றுகொண்டே, இப்போது பொதுக்கட்டமைப்பு உடன்படிக்கை யும் செய்து கொள்ளப்பட்டிருக்கிறது என்றும் தெரிவித்தார்.

கடல்கோள் அனர்த்தத்தால் பாதிக்கப்பட்ட வடக்கு, கிழக்குப் பிரதேசங்களில் நிவாரணப் பணிகளை மேற்கொள்வதற்கு விடுதலைப் புலிகளுடன் இணைந்தே அரசாங்கம் செயற்படவேண்டும் என்ற அடிப்படையில் இந்த உடன்படிக்கை செய்யப்பட்டிருப்பதன் மூலம், இலங்கையில் இரண்டு அதிகார மையங்கள் இருக்கின்றன என்பது மீள வலியுறுத்தப்பட்டிருப்பதாகவும் தெரிவித்த தமிழ்ச்செல்வன், இந்த உடன்படிக்கையின் மூலம் தமிழீழ விடுதலைப் புலிகளோ, தமிழ் மக்களோ இலங்கையின் இறைமையை ஏற்றுக்கொண்டுள்ளனர் என்று தெரிவிக்கப்படுவது தவறானது என்றும் குறிப்பிட்டுள்ளார்.

இதேவேளை பொதுக்கட்டமைப்பு உடன்படிக்கை சமாதான முயற்சிகளை புதுப்பிப்பதற்கான ஒரு முன்னேற்பாடாகக் கருதப்படமுடியுமா? என்று கேட்கப்பட்ட கேள்விக்குப் பதிலளித்த தமிழ்ச்செல்வன், சமாதான முயற்சியுடன் இதனைத் தொடர்புபடுத்தும் கருத்தெதுவும் சுனாமி நிவாரண உடன்படிக்கையில் தெரிவிக்கப்பட்டிருக்கவில்லை என்றும், வேண்டுமானால், இருதரப்புக்கும் இடையே நம்பிக்கையைக் கட்டியெழுப்புவதன் மூலம் சமாதான முயற்சிகளை மீண்டும் ஆரம்பிப்பதற்கான ஒரு அடிப்படையாக இது அமையமுடியும் என்றும் தெரிவித்துள்ளார். (32)

### பொதுக்கட்டமைப்பை எதிர்த்து

# தேசப்பற்றுள்ள தேசிய இயக்கம் கொழும்பில் நேற்று ஆர்ப்பாட்டம்

(கொழும்பு)

தேசப்பற்றுள்ள தேசிய இயக்கம் நேற்றுக் கொழும்பில் ஆர்ப்பாட்டப் பேரணி ஒன்றை நடத்தியுள்ளது. லிப்டன் சுற்றுவட்டத்தில் இருந்து நோர்வே தூதரகம் வரையில் இந்தப்பேரணி நடைபெற்றுள்ளது.

பொதுக்கட்டமைப்பிற்கு எதிராகவும் இராணுவ புலனாய்வுத்துறை அதிகாரிகள் படுகொலை செய்யப்படுவதைக் கண்டித்தும் இந்தப் பேரணி நடத்தப்பட்டதாக அறிவிக்கப்படுகின்றது.

அரசாங்கம் சர்வதேச அழுத்தங்களுக்கு கட்டுப்படுவதே தற்போது தோன்றியுள்ள நெருக்கடி நிலைக்கு காரணம் என ஆர்ப்பாட்டத்தில் கலந்து கொண்டவர்கள் தெரிவித்தனர்.

ஜே.வி.பி பிரசாரச் செயலாளர் விமல் வீரவன்ச மற்றும் தேசப்பற்றுள்ள தேசிய இயக்க தலைவர் எல்லே குணவன்ச தேரர் ஆகியோர் இந்தப் பேரணியில் கலந்து கொண்டனர். நோர்வே தூதரகத்தினுள் இவர்கள் செல்ல முற்பட்ட போதிலும் அங்கு திரண்டிருந்த பொலிசார் அதற்கு அனுமதிக்காமையை அடுத்து நோர்வே தூதரக வாசலில் அவர்கள் கூட்டம் ஒன்றை நடத்தினார்கள்

இதில் கருத்து வெளியிட்ட விமல் வீரவன்ச சர்வதேச அழுத்தங்களுக்கு அடிபணியாத அரசாங்கம் ஒன்றை உருவாக்குவதே தமது இலட்சியம் என்று கூறினார். (32)

## தமிழீழ...

மாங்குளம் போர்க் சிலையடியிலும், பாண்டியன்குளம் பிரதேசத்தில் பாண்டியன்குளம் பாடசாலை, பாலிநகர், வன்னிவிளாங்குளம் சந்தி ஆகிய இடங்களிலும் மல்லாவிப் பிரதேசத்தில் கோட்டைகட்டிய குளம், ஐயன்கன்குளம் ஆகிய கிராமங்களிலும், உடையார்கட்டு,சுதந்திரப்புரம்சந்தி, உடையார்கட்டு மூங்கிலாறு சந்தியிலும் இடம்பெறும். மல்லாவி நகர் பகுதியில் பிற்பகல் 4.30 மணிக்கும், முல்லை நகரில் பிற்பகல் 4.30 மணிக்கும் நடைபெறும் என அவர் மேலும் தெரிவித்தார்.

இதேவேளை முல்லை மாவட்ட கடற்புலிகளின் அரசியல்துறைக்குட்பட்ட அனைத்துப் பகுதிகளிலும் ஒருங்கிணைந்து முல்லைத்தீவு நகரப்பகுதியில் முல்லை மக்களும், கடற்புலிகளும் இணைந்து கரும்புலிகள் நாளை எழுச்சியுடன் கொண்டாடுவதற்கான ஏற்பாடுகள் இடம்பெற்று வருகின்றன.

முல்லை பொது மைதானத்தில் மாலை 4.00 மணிக்கு கரும்புலிகளின் மாவீரர்களின் பெற்றோர் கௌரவித்து அழைத்துவரப்பட்டு இரவு 7.05 மணிக்கு கரும்புலிகள் நினைவுரைகளும், கலைநிகழ்வுகளும் "கடற்கரும்புலிகள் பாகம்-09' ஒலிப்பேழையின் வெளியீட்டு விழாவும் இடம்பெறவுள்ளதென முல்லை மாவட்ட கடற்புலிகளின் அரசியல் துறைப் பொறுப்பாளர் மா.ரங்கன் தெரிவித்துள்ளார்.

### மன்னாரில்....

மன்னாரில் கரும்புலிகள் தினத்தை முன்னிட்டு மாவட்ட பிரதேச கிராமரீதியாக நிகழ்வுகள் இடம்பெறவுள்ளன.

### தீவகத்தில்...

மாலை 6.30 மணிக்கு புளியங்கூடல் முத்துமாரியம்பாள் ஆலய முன்றலில் கரும்புலிகள் நாள் நிகழ்வுகள் தொடங்கும். விசேடமாக அமைக்கப்பட்ட கரும்புலிகள் நினைவுப் பந்தலில் சுடரேற்றி மலரஞ்சலி இடம்பெறும். தொடர்ந்து நினைவுப் பொதுக்கூட்டம், சிறப்புரைகள், கலைநிகழ்வுகள் என்பன இடம்பெறும்.

### திருகோணமலையில்...

திருகோணமலை மாவட்டத்தில் கரும்புலிகள் தினத்தையொட்டிய பிரதான நிகழ்வு, மூதூர் கிழக்கில் சம்பூர் பொது விளையாட்டு மைதானத்தில் காலை 9.00 மணி தொடக்கம் இரவு 12.00 மணிவரை நடைபெறும்.(சோ,ச,தீ,24,08,20,18,25.)

## அரிசி...

கதவைத் திறந்த நிலையில் தூக்கத்தில் இருந்த போது இனந்தெரியாத நபர்கள் கைக்குண்டை வீசி வெடிக்கச் செய்துவிட்டு தப்பிச் சென்றுள்ளனர் என்று அக்கரைப்பற்று பொலிசார் தெரிவித்தனர்.

## சிங்கள...

போராட்டத்தைத்தொடர்ந்து மேற்கொண்டனர்.

அதன் பின்னர் இப்போராட்டத்திற்கான சாதகமான பதிலை மூன்று நாட்களில் தெரிவிப்பதாக குருநகர் படைப் பொறுப் பதிகாரி மக்களிடம் நேரில் வந்து உறுதி அளித்ததையடுத்து பிற்பகல் 3.30 மணியளவில் கடற்றொழிலாளர் தமது போராட்டத்தைக் கைவிட்டனர்.

இந்தப் போராட்டத்தின்போது குருநகர் சந்தியில் மக்கள் ரயர்களைக் கொளுத்திப் போட்டனர். கொட்டடியில் மக்கள் வீதித்தடைகளை ஏற்படுத்தினர். வணிக நிலையங்கள் மூடப்பட்டிருந்தன. (27,சு,28)

## வீரச்சாவு...

துணைப்படை வீரர் ஒருவர் வீரச்சாவடைந்துள்ளார்.

- தமிழீழ தேசிய துணைப்படை வீரர் மகேந்திரராசா

(இராசேந்திரம் - மகேந்திரராசா, கடற்கரைச் சேனை பாடசாலை முன்பாக)

03.11.1988 அன்று சந்தண வெட்டயில் வைத்து இந்திய இராணுவத்தின் பதுங்கித்தாக்குலின் போது தமிழீழ தேசிய துணைப்படை வீரர் ஒருவர் வீரச்சாவடைந்துள்ளார்.

- தமிழீழ தேசிய துணைப்படை வீரர் காளிராசா

(செல்லையா காளிராசா (அப்பா) - 3ஆம் வட்டாரம் கட்டைப் பறிச்சான்)

26.09.1993 அன்று இலக்கத்தையில் சிறிலங்கா இராணுவத்தின் பதுங்கிதாக்குதலின் போது தமிழீழ தேசிய துணைப்படை வீரர் ஒருவர் வீரச்சாவடைந்துள்ளார்.

- தமிழீழ தேசிய துணைப்படை வீரர் சிறிகந்தராசா

(இராசரட்ணம்-சிறிகந் தராசா (குஞ்சி)

07.06.1987 அன்று ஆலங் கேணி பகுதியில் சிறிலங்கா படையி னரின் எறிகணை வீச்சின்போது தமிழீழ தேசிய துணைப்படை வீரர் ஒருவர் வீரச்சாவடைந்துள்ளார்.

- தமிழீழ தேசிய துணைப்படை வீரர் மனோகர கிறிஸ்நானந்தராசா

(மாரிமுத்து -மனோகர கிறிஸ் நானந்தராசா (ரஞ்சன்) L/V-03 கிளிவெட்டி)

08.04.1994 அன்று மல்லிகைத்தீவு பச்சை வெளியில் வைத்து சிறிலங்கா இராணுவம் பதுங்கித்தாக்கியதில் தமிழீழ தேசிய துணைப்படை வீரர் ஒருவர் வீரச்சாவடைந்துள்ளார்.

- தமிழீழ தேசிய துணைப்படை வீரர் புலேந்திரன்

(மயில்வாகனம் - புலேந்திரன் - மேன்காமம் கிளிவெட்டி)

12.10.1996 அன்று பூனகரில் வைத்து சிறிலங்கா இராணுவத்தின் பதுங்கித்தாக்குதலின்போது தமிழீழ தேசிய துணைப்படை வீரர் ஒருவர் வீரச்சாவடைந்துள்ளார்.

- தமிழீழ தேசிய துணைப்படை வீரர் மகாலிங்கம்

(செம்புக்குட்டி-மகாலிங்கம் (கெனடி) - பூனகர் ஈச்சிலம்பற்று)

13.07.1988 அன்று கட்டைப்பறிச்சான் இராணுவத்தினால் கைது செய்யப்பட்டு தாக்கப்பட்டபோது தமிழீழ தேசிய துணைப்படை வீரர் ஒருவர் வீரச்சாவடைந்துள்ளார்.

- தமிழீழ தேசிய துணைப்படை வீரர் யேசுராசா

(இராசப்பு - யேசுராசா (சிக்குறு)- சூடைக்குடா - 1)

18.04.2003 அன்று மூதூர் பகுதியில் சிறிலங்கா இராணுவத்தினரினதும் முஸ்லிம் காடையர்களினதும் தாக்குதலில் காயமடைந்து பின்னர் 25.04.2003 அன்று தமிழீழ தேசிய துணைப்படை வீரர் ஒருவர் வீரச்சாவடைந்துள்ளார்.

- தமிழீழ தேசிய துணைப்படை வீரர் ரமணன்

(மாணிக்கராசா- ரமணன், 1ஆம் வட்டாரம் கடற்கரைச் சேனை மூதூர்)

25.04.1991 அன்று தெகிவத்தை என்னும் இடத்தில் வைத்து சிறிலங்கா இராணுவம் பதுங்கித்தாக்கிய போது தமிழீழ தேசிய துணைப் படை வீரர் ஒருவர் வீரச்சாவடைந்துள்ளார்.

- தமிழீழ தேசிய துணைப்படை வீரர் நல்லதம்பி

(அருணாசலம் - நல்லதம்பி (கந்தசாமி, 58 பாரதிபுரம் கிளிவெட்டி)

15.02.1992 அன்று இறால் குளிப்பகுதியில் சிறிலங்கா இராணுவம் நடத்திய பதுங்கித்தாக்குதலின் போது தமிழீழ தேசிய துணைப்படை வீரர் ஒருவர் வீரச்சாவடைந்துள்ளார்.

- தமிழீழ தேசிய துணைப்படை வீரர் பயஸ்நவரட்ணராசா

(சிவமாலை - பயஸ்நவரட்ணராசா- நாவலடி, இறால்குளி, தற்போதைய முகவரி நாவலடி அகதிமுகாம்)

20.07.1991 அன்று கல்வரப்பு பகுதியில் இலங்கை இராணுவத்தின் சுற்றிவளைப்பின்போது தமிழீழ தேசிய துணைப்படை வீரர் ஒருவர் வீரச்சாவடைந்துள்ளார்.

- தமிழீழ தேசிய துணைப்படை வீரர் கந்தசாமி

(சித்திரவேல் -கந்தசாமி(கந்தன்), பூமரத்தடிச் சேனை ஈச்சிலம்பற்று)

ஆகியோரே வீரச்சாவடைந்துள்ளனர். இம்மாவீரர்களுக்கு தமிழீழ விடுதலைப்புலிகள் வீரவணக்கம் செலுத்துகின்றனர்.


# கண்ணீர் வணக்கம்

## அமரர். கந்தையா சுப்பிரமணியம்

தமிழீழ வைப்பகப் பணியாளர் திரு.சு. கஜன் அவர்களின் தந்தையார் திரு.கந்தையா சுப்பிரமணியம் அவர்கள் 03.07.2005 அன்று யாழ்ப்பாணத்தில் இயற்கை எய்தியதையிட்டு எமது கண்ணீர் அஞ்சலியைத் தெரிவித்துக்கொள்கிறோம். அன்னாரின் பிரிவால் துயருறும் குடும்பத்தினருக்கும் எமது ஆழ்ந்த இரங்கலைத் தெரிவித்துக்கொள்கிறோம்.

*பணிப்பாளர், பணியாளர்கள்*
*தமிழீழ வைப்பகம்.*

(சி.12305)



மெகா
கொம்பியூட்டர் உயர் கல்விக்கான
புலமைப்பரிசில் பரீட்சை
10-07- 2005 ஞாயிறு
இலவச அனுமதிகளுக்கு
ASIAN COMPUTERS
யாழ்ப்பாணம் சுன்னாகம்
சாவகச்சேரி நெல்லியடி கிளிநொச்சி
(சி-12146)


இப்பத்திரிகை கிளிநொச்சி ஈழநாதம் பணிமனையில் 2005 ஆம் ஆண்டு யூலை மாதம் 05 ஆம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது

# இன்று பரந்தன் நகரில் பாதம் பதிக்கும் தமிழீழ வைப்பகத்திற்கு எமது வாழ்த்துக்கள்!

**சந்தன அழகன்**
பல்பொருள் உதிரிகள் வாணிபம்
யாழ்சாலை, பரந்தன்.

**குணம்**
அழகுப்பொருள் வாணிபம்
அங்காடி, பரந்தன்.

## செந்துளசி விற்பனை நிலையம்
வேளாண் உள்ளீடுகள், எரிபொருள், கட்டடப்பொருட்கள் விற்பனையாளர்
பூநகரி வீதி, பரந்தன்

## கரைச்சி வடக்கு பலநோக்குக்கூட்டுறவுச்சங்கம்-பரந்தன்

## மகிழ் ஸ்ருடியோ
பேருந்து நிலையம், பரந்தன்.



இன்று பரந்தனில் தனது 12 ஆவது கிளையினைத்திறந்து பணியை ஆரம்பிக்கும்
தமிழரின் காப்பகமாம்

# தமிழீழ வைப்பகத்திற்கு

எமது நல்வாழ்த்துக்களைத்தெரிவித்துக்கொள்கின்றோம்.

ஒரே கூரையின் கீழ் குளிரூட்டப்பட்ட காட்சியறையில்
உங்கள் உந்துருளித்தெரிவுகளுக்கு

## சிவகுரு கட்டடப்பொருள் உந்துருளி வாணிபம்

நாயகிகட்டடம், பரந்தன், கிளிநொச்சி. தொ.பே-021-228 5072



# இணுவில் கந்தசு
# தேர்த்திருவிழா சிறப்பி


**சுஜி மெடிக்கல் கிளினிக்**

இணுவில் மேற்கு, இணுவில்.

பட்டுப்புடவைகள் அன்பளிப்புப்பொருட்கள் விற்பனையாளர்

**கணேசன்சென்ரர்**

தொ.பே-021-222 5708

கே.கே.எஸ் வீதி, இணுவில்.

கட்டடப்பொருட்கள் விற்பனையாளர்கள்

**விநாயகர் ஹாட்வெயர்**

கே.கே.எஸ் வீதி, இணுவில்.

தங்கப்பவுண் நகை வியாபாரம்

**புதிய கஜீபன் நகைமாடம்**

கே.கே.எஸ் வீதி, இணுவில்.

**விதுஜா சுப்ப மார்க்கட்**

மின்சார உபகரணங்கள், அன்ரன் பி.வி.சி பைப் வகைகள்,சமையல் வாயு, றேடியோ வகைகள் அன்பளிப்புப்பொருட்கள் விற்பனையாளர்கள்..

**விதுஜா சுப்ப மார்க்கட்**

இணுவில் சந்தி, இணுவில்.


## பழங்குடிகள் ஸ்தாபித்த எட்டுக்கோயில்களில்



யாழ்ப்பாண பழம்பதிகளுள் ஒன்றான இணுவில் சைவத் தமிழ்ப் பண்பாட்டுக்கு முதன்மை அளித்து வருவது யாவரும் அறிந்த உண்மை. இவ்வூரில் சைவ சமயத்தைச் சார்ந்தவர்களே அன்றிப் பிறசமயத்தைச் சேர்ந்த ஒருவரேனும் நிரந்தர குடியானவராய் இல்லை. இதுவொன்றே இவ்வூரவர்களின் சைவசமயப் பற்றுக்கு ஓர் எடுத்துக்காட்டாகும். சைவ பாரம்பாரியங்களில் இறுக்கமான பற்றுடைய இவ்வூரில் பட்டி தொட்டிகளில் எல்லாம் இறைவழிபாடுகள் நடத்தப்பட்டன. இறைவனின் திருவுருவை வைத்துக் கோயில் என்று கும்பிடும் பழக்கம் இங்கு நீண்டகாலமாக உண்டு. இணுவிலின் கிழக்கு எல்லையில் உள்ள காரைக்கால் சிவன் கோயில் முதல் மேற்கெல்லையில் இருக்கும் பரராஜப் பிள்ளையார் கோயில்வரை ஒரு வரிசையில் வைத்துப்பார்க்கும் பொழுது எட்டுக் கோயில்கள் ஒன்றன்பின் ஒன்றாக அமைக்கப்பெற்றுள்ளன. அவற்றுள் இணுவில் பெரிய கோயில் என்பது இணுவில் கந்தசுவாமி கோயிலைக்குறிக்கும் .இங்கு கோயில் கொண்டுள்ள முருகனை ''நொச்சியம் பதியான், காஞ்சியம் பதியான், கல்யாணவேலவர் எனப் பல பெயர்களால் சுட்டி அழைத்து வழிபடுவர். இப் பெயர்கள் ஒவ்வொன்றுக்குமான பெயர்க் காரணமும் உண்டு. இக்கோயில் ஏறக்குறைய நான்கு நூற்றாண்டுகளுக்குமுன் நிறுவப்பெற்றுள்ளது .

### முருகனின் திருவுள்ளப்படி அமைந்த ஆலயம்

இணுவிலின் பழங்குடி மகனான வேலாயுதரும் மனைவியும் முருகனிடத்தில் ஆராத அன்புடையவர்கள் .வேலாயுதர் ஓர் இரவு நித்திரையாக இருக்கும் பொழுது முருகப்பெருமான் கனவில் தோன்றி தான்காஞ்சியம் பதியில் இருந்து வருவதாக சொல்லித் தமக்கு இல்லிடம் ஒன்று அமைத்து தருமாறும் கேட்டார்: எங்கே அமைத்துத்தருவதென்று வேலாயுதர் கேட்க உமது வெற்றிலைத் தோட்டத்தில் நொச்சித்தடி நடப்பட்டிருக்கிறது. அந்த இடத்தில் அமைக்கலாம் என்று கூறினார். கனவின் உண்மையை அறிய வேலாயுதர் காலையில் எழுந்து வெற்றிலைத் தோட்டத்தைச் பார்க்க சென்றபொழுது நொச்சித்தடி நடப்பட்டிருந்தது. முதல்நாள் இரவு கண்ட கனவை எண்ணிக்கண்களித்தார். கனவில் காட்சி தந்து இல்லிடம் கேட்டது முருகப்பெருமான் என்று நம்பினார்.

முருகப்பெருமானின் திருக்குறிப்பை நிறைவேற்ற வேலாயுதர் தனது தோட்டத்தில் இருந்த மாட்டுக் குடிலை நொச்சித்தடி நடப்பட்டிருந்த இடத்தில் கொண்டு வந்து வைத்தார். கனவில் தோன்றிய பெரியவர் காஞ்சியம்பதி எனப் குறிப்பிட்டது காஞ்சிபுரக் குமரக்கோட்ட கந்தன் என்பதையும் உணர்ந்து கொண்டார். கந்தப்பெருமானின் அறிகுறியாக வேற்பெருமானை அக்குடிலில் வைத்து வழிபட்டார். நாளடைவில் வெற்றிலைத்தோட்டம் அடியார்கள் வழிபடும் வணக்கத்தலமாக மாறியது. மக்கள் கூடி பொங்கல் பூசை செய்து வழிபடத் தொடங்கினர். பூசைகளை வேலாயுதரும், அவரது புதல்வர்களான இராமநாதர், கந்தர் கதிர்காமர்,அருணாசலம் ஆகியோரும் நடத்தினர். பூசை வழிபாடுகளில் அருணாசலம் மிகுந்த ஈடுபாட்டுடன் முன் நின்று செய்தார். உருவேறத் திருவேறும் என்ற வகையில் அங்கு பல அற்புதங்களும் நிகழலாயின கந்தக்கடவுளின் கருணை மழையில் திளைத்த அருணாசலம் வாக்குச்சித்தி பெற்று ஒரு சித்தருமானார்.

### செங்கற்கோயில் அமைப்பு

முருகப்பெருமானின் திருவருளை நாடி வந்த அடியார்களுக்கு அருணாசலம் அவர்களின் அருள்வாக்கும் ஒரு வரப்பிரசாதமாய் கிடைக்கலானது அடியார் தொகை அதிகரித்ததால் மாட்டுக்குடிலைத் மாற்றி அமைக்கவேண்டிய தேவை ஏற்பட்டது.அருணாசலம் அவர்களின் முயற்சியாலும் அடியார்களின் உதவியாலும் செங்கற் கோயிலாக அமைத்து கும்பாபிஷேகம் செய்யப்பட்டது. கோயிலில் கூட்டு வழிபாடும் கந்தப்புராணபடனமும் நடைபெறலாயின. அருணாசலம் அடியார்களின் செயற்பாட்டால் அடியார்களின் நோய்ப், பிணிகள் தீர்க்கப்பட்டன.

நோய்க்கு ஏற்ற மருந்துகளும் கொடுத்து குணமடையச் செய்தார். அடியார்கள் தொகை மிகுந்து வந்த காரணத்தால் கோயில் திருப்பணி வேலைகளில் தாமும் பங்காளிகளாக வரவேண்டும் என்ற ஆவல் அடியார்களைத் தூண்டியது. அதனால் செங்கற்கோயில் 1840ஆம் ஆண்டு வெள்ளைக் கற்கோயிலாக மாற்றியமைக்கப்பட்டது. அருணாசலம் முதுமைப்பரும் அடைந்த காரணத்தினால் அவரது மகன் சுப்பிரமணியம் கோயில் நடவடிக்கைகளைக் கவனித்தார். இவருடைய காலத்தில் சிவாச்சாரியார் ஒருவர் பூசைக்கு நியமிக்கப்பட்டார். கற்கோயில்

## இன்றைய தேர்த்திருவிழா சிறப்புற


**தரத்திற்கு உத்தரவான**

- அண்ணா கோப்பி
- அண்ணா பற்பொடி
- அண்ணா ஜீவாகாரம்
- அண்ணா கறிமிளகாய்த்தூள்
- அண்ணா அப்பம் மா
- அண்ணா அரிசி மா
- குமரன் விபூதி
- துர்க்கா பத்தி
- ரோஸ் பத்தி
- சாயி சுகந்தா

**அண்ணா தொழிலகம்**

இணுவில்.

மின்சார உபகரணங்கள் அன்
விற்பனையாள

**ஸ்ரீ வால்ற**
**அன் ச**

(வீட்டு மின் இணைப்புக்களும் செ

கே.கே.எஸ் வீதி

# ...வாமி கோயில்

# ...தழ்–05–07–2005



## ...ஒன்றாய் திகழும் இணுவில் பெரிய கோயில்

...ல நடைபெற்றுக் கொண்டிருந்த வேளை
...யம் இறைவனடி சேர்ந்தார். அவருக்குப்பின்
...மகன் ஆறுமுகம் தனது தந்தையாரின்
...ளப் பொறுப்பேற்று திறப்படச்செயலாற்றினார்.
...திருவருளால் அவருக்கும் வாக்குச்சித்தி
.... அத்தோடு வைத்தியத்திலும் அவருக்கு
... உண்டாயிற்று. நாட்டப்பட்ட தீராத புண்
... இவர் தயாரித்த எண்ணெய் மிக சுட்டிப்பாகக்
...ந்தியது. அவர் தயாரித்த முறையிலான
... அவர் சந்ததியினர் இப்பொழுதும்
...ன்றனர். ஆறுமுகம் தனியொருவராய் நின்று
...டுத்த வெள்ளைக் கற்கோயிலை நிறைவேற்ற
...மானது. நிதி நெருக்கடியும் ஏற்பட்டது. மிகுந்த
...டன் முருகனை நினைத்த வண்ணம் ஒருநாள்
...ந்திரைக்குச் சென்றார். உள் அன்புடன்
... ஒருமுறை நினைத்தால் "அவர் இம்முறை
... உதவும் இயல்பினன்" "வேதனையுடன்
... ஆறுமுகத்தாரின் கனவில் முருகன் தோன்றி
... ...த ஆறுமுக (கோமேஸ்) முதலியாரிடம்
... பணித்தார். அவ்வாறே முதலியாரின் கனவில்
... தோன்றி இணுவில் ஆறுமுகத்தின்
...க்கு நிதி உதவும்படி பணித்தார். அடுத்த
...ரும் சந்தித்த போது முதலியார் தம்பியாரின்
...ன் கட்டுமான வேலைகள் செய்து தருவதாக
...த்து அதன்படி திருப்பணிகளைச் செய்து
...ள்.

**...க்கு முற்பட்ட மஞ்சம் .....**

...னி தந்த கலைச்செல்வம் இணுவை மஞ்சம்,
... (பெரியசந்நியாசியார், சுப்பிரமணியம்)
...ட்டத்தில் உருவாக்கப்பெற்றது. ஒரு
...டுக்காலத்தை எட்டிப்பிடித்துள்ள மஞ்சம்
...ந்தியாவிலோ, வேறு எங்குமோ காணமுடியாது
...தால் பொருள் ஆராய்ச்சியாளர்கள்
...ர்கள். இந்த மஞ்சம் இரு தசாப்தங்களுக்கு
...திருத்தியமைக்கப்பட்டு நாற்பதடி உயரமான
...ாட்டகையில் நிறுத்தப்பட்டுள்ளது. வருடத்தில்
... மகோற்சவ 12ஆம் நாள் உற்சவமாகிய
... ஆறுமுகர் வள்ளி தேவசேனா சமேதரராக
...வருவார்.

...ம் ஆண்டு மூலஸ்தானம் புதுப்பிக்கப்பட்டு
...ங்...க் கொண்ட கருவறையில் வள்ளி,
... ச...தரராய் முத்துக்குமாரசுவாமி பிரதிஷ்டை
...டு கும்பாபிஷேகம் நடைபெற்றது. 1988ஆம்
...ராவர்த்தன கும்பாபிஷேகம் நடைபெற்றது.
...இல் தேர் உபயகாரரும், பொதுமக்களின்
...ர் புதிய சித்திரத்தேர் உருவாக்கப்பட்டது.
... ஆண்டு அறுபது ஆண்டுகளுக்கு முன்
...க்கப்பட்ட கண்டாமணி திருத்தி
...பட்டது. 1999ஆம் ஆண்டு அறுநூற்றுப்பத்து
...றயுடைய கண்டாமணி லண்டனில் இருந்து
...ப்பட்டு புதிய கோபுரத்தில் ஏற்றப்பட்டுள்ளது.
...ஆண்டு மூன்று தளத்துடன் முத்துநாகலிங்கம்
... கட்டுவிக்கப்பட்ட இராஜகோபுரம் ஐந்து

தளத்துடன் நிர்மாணிக்கப்பட்டுள்ளது. சென்ற ஆண்டு ஐப்பசி மாதத்தில் ஆலயம் பாலஸ்தாபனம் செய்யப்பட்டு திருத்த வேலைகளும் செய்யப்பட்டுள்ளன. பரிவார தெய்வங்களுக்கு (சோமஸ்கந்தர், சந்தானகோபாலர், இலக்குமி, நாகதம்பிரான், சூரியன், சந்திரன், மணிக்கூட்டு வைரவர்) புதிய கட்டடங்கள் கட்டப்பட்டுள்ளன. அத்துடன் யாகசாலை, வசந்த மண்டபம் என்பனவும் புதிதாக அமைக்கப்பட்டுள்ளன.

2003இல் தெற்குவாசல்க் கோபுரம் கட்டப்பட்டது. 2004இல் இராசகோபுர வாசல் முகப்புக்கட்டப்பட்டது.

**புண்ணிய தீர்த்தம்**

ஒரு ஆலயத்தின் கீர்த்திக்கு அவ்வாலயத்தில் அமைந்துள்ள புண்ணிய தீர்த்தமும் விசேட சிறப்பைத் தருகின்றது. அந்த வகையில் ஆலயத்தின் வடபுறத்தில் உள்ள சாந்தியடி வைரவசுவாமி சந்நிதியும், முன்பாகவுள்ள தீர்த்தக்கிணறும் மிகப் பிரசித்தமானது. அடியார்களைப் பீடித்துள்ள நோய்களைக் குணப்படுத்திச் சாந்தியளிக்கும் சாந்தியடி வைரவப் பெருமானும், நொச்சியம்பதி முருகப்பெருமானும், இணுவையம்பதி மக்களின் கண்கண்ட தெய்வங்கள் என்பதும் மனங்கொள்ளத்தக்கது.

"முருகப் பெருமான் திருவடி சரணம்"

### பிரதம குருக்களின் ஆசிச்செய்தி

முருகப்பெருமான் அடியார்களே "ஸ்கந்தஸ்ய கீர்த்தீம் அதுலாம் கலிகல்மஸ நாஸிநீம்"

என்பது வடமொழிஸ்காந்தம். கலியுகத்தின் கண்கண்ட தெய்வதாக விளங்குபவர் கந்தவேட் பெருமானே

மருவுமடியார்கள் மனதில் விளையாடுங் கந்தவேளே கலியுகத்திலே வரும் கவலைகள், துன்பங்கள், பிணிகள் யாவற்றையும் போக்கியருள்பவர்

இன்றையதினம் எமது இணுவைப் பெருங்கோயிலிலே தேர்த்திருவிழா நடைபெறுகின்றது. இறைவன் தேரேறி விழாக் கொள்வதெல்லாம் துஷ்ட நிக்கிரக சிஷ்ட பரிபாலன நோக்கினாலேயாம்

"புன்நெறியதனிற் செல்லும் போக்கினை விலக்கிமேலாம்
நன்நெறி ஒழுகச்செய்து நவையறு காட்சி நல்கி
என்னையும் அடியனாக்கி இருவினை நீக்கியாண்ட பன்னிரு
தடந்தோள் வள்ளல் பாதகங்கயங்கள் போற்றி

என்று ஆறுமுகங் கொண்டு ஆன்மகோடிகளுக்கு ஆறுதலைத் தருவதற்காகத் தேரேறி வருங்கோலங்கண்டு போற்றித் துதித்து உய்தியடைவீர்களாக!

"ஸர்வே ஜநா சுகிநோ பவந்து"

சிவஸ்ரீ.இராமநாத ஸ்ரீஸ்கந்தராஜா குருக்கள்
மகேற்சவகுரு, பிரதமகுருக்கள்
சிவஸ்ரீ.உருத்திர அபராஜிதக் குருக்கள் - பிரதமகுருக்கள்
பரம்பரை பூசகர்கள்
இணுவில்கந்தசுவாமி கோயில்


**தர்மகர்த்தா சபை**
இணுவில் கந்தசுவாமி கோயில்
இணுவில்

**அறிவாலயம்**
கந்தசுவாமி கோயில் முன்
இணுவில்

சகல விதமான பாடசாலை உபகரணங்கள்
பத்திரிகைகள் விற்பனையாளர்
**கிஸ்ணா**
**புத்தக நிலையம்**
இணுவில்

**ஸ்ரீ லட்சுமி ரீ றூம்**
சகல விதமான உணவு வகைகள்,
குளிர்பான வகைகள் விற்பனையாளர்
இணுவில்

**சாந்தினி**
**தொலைத்தொடர்பகம்**
அன் கூ. ...ார்
இணுவில்


### ஆலய தர்மகர்த்தா சபையின் ஆசிச்செய்தி

சைவப் பெருவூராகிய இணுவையம்பதியில் பழம்பெரும் திருத்தலமாக விளங்கும் இணுவில் கந்தப் பெருமானுக்குஇன்று தேர்.

தமிழ்க்கடவுளாகி கலியுகக் கந்தனின் தேரோடும் வீதியில் நாமெல்லோரும் நடமாடும் பெரும் புண்ணியம் பெற்றவர்கள். அத்திருநாளில் எம்பெருமானின் அருளாட்சி அனைவருக்கும் கிடைக்க வேண்டுகின்றோம்.

தர்மகத்தாசபை

## ...நடைபெற வாழ்த்துகின்றோம்


...ப்புப்பொருட்கள்
...ரிகை
...ஸ்
(... கொடுக்கப்படும்)
இணுவில்.

PURE GINGELLY OIL
சுத்தமான நல்லெண்ணெய்
தரமான எள்ளில் சுகாதார
முறைப்படி தயாரிக்கப்பட்டது.
தயாரிப்பாளர்- மல்ரி ஓயில் இன்டஸ்ரிஸ் லிமிட்டெட்
இணுவில்.

# 45ஆம் நாள் நினைவலைகள்

மலர்வு 08 04 1983

உதிர்வு 22 05 2005



பழக இனியவனாய் பார்ப்போர்க் எழியவனாய்
உறவில் ஒருவனாய் உள்ளம் கவர்ந்தவனாய்-எம்முடன்
அளவளாவிய வார்த்தைகள் ஆறுமுன்னே-எம்மை
நிலை குலைய வைத்து நீ பிரிந்து சென்றனையோ

அமரர்
மகாலிங்கம் கேதாரகுமார்(குமார்)
நோயாளர் நலன்புரி பணிப்பாளர்

உன் நினைவால் துயருறும்
தந்தை-மகாலிங்கம்
தாய்-ராஜேஸ்வரி
சகோதரர்கள்-ஜேக்குமார்
ஜெகதீஸ்வரி
சந்திரகுமார்
உதயகுமார்
சிவகுமார்
ராஜ்குமார்


முகவரி:- இல.18, D10
உருத்திரபுரம்

(சி.12277)

# நான்காம் ஆண்டு நினைவஞ்சலி

தாயின் மடியில் 24 05 1981

தாயக மண்ணில் 05 07 2001



எல்லைப்படை வீரர்
வீரவேங்கை சுதாகரன்(சுதா)
(விஜயசுந்தரம் சுதாகரன்
அன்பு அச்சக பணியாளர்)

நாட்டின் விடியலை நாடி நீ மறைந்து
நான்கு ஆண்டுகள் ஆயினும் ஆறாத் துயருடன்
மீளா நினைவுகளை மீட்கும் உன்
உதிர உறவுகளும் உன் நினைவால்
கண்ணீர் சுமந்து வாழும் அன்பு அன்னை.

தற்காலிக முகவரி:-
ச.முத்துலிங்கம்,
177, சேவீஸ் வீதி,
கனகாம்பிகைக்குளம்,
கிளிநொச்சி.

தகவல்:-உனது உறவுகள்
நிரந்தர முகவரி:-
அளவெட்டி வடக்கு,
அளவெட்டி,
யாழ்.

(6323)

# 02 ஆம் ஆண்டு நினைவஞ்சலி

தாயின் மடியில் 17 05 1975

தாயக மண்ணில் 05 07 1997



2ஆம் லெப். மயூரி
கந்தையா சுபா
மீசாலை மேற்கு, மீசாலை

தூங்குகிறவர்கள் எழும்புவதற்கு
பொழுது இருமுறை விடிவதில்லை
அக்கா நீ துள்ளி எழுந்த புயல்
மருந்துவப் பிரிவில் நீ பேசிய வார்த்தைகள்
கேட்பவரிற்கு சொந்தமானதல்லவா
உன் அன்பான உள்ளம்- எம்மை
எதையும் பொறுமை கொள்ள வைக்கும்
உறவே! வறுமை நிலைக்கு என்றும்
பயப்பிடமாட்டோம்-[illegible]ள்ள தலைவர்
உள்ளதை என்றும் [illegible] மாட்டோம்
சுதந்திரத்திற்காய், [illegible]சத்திற்காய்
தம்மை கரும்புகை[illegible] காவியநாயகர்களின்
புனிதநாளில் உம்[illegible] தொழுகிறோம்
உன் கல்லறை பணி[illegible]

உன் நினைவில்
தம்பி,
க.பூவண்ணன்,
மயூரி இல்ல போராளிகள்.

(R.2304)

# சிறைக் காவலர்கள் இருவர் விடுதலை

(யாழ்ப்பாணம்)

2001 ஆம் ஆண்டு நான்கு கைதிகள் தப்பிச் செல்வதற்கு உதவியதாகக் குற்றம் சாட்டப்பட்ட சிறைக்காவலர்கள் இருவர் நீதிமன்றத்தால் விடுதலை செய்யப்பட்டனர்.

கடந்த 2001 ஆம் ஆண்டு ஓகஸ்ட் மாதம் யாழ். சிறைச்சாலையிலிருந்து நான்கு கைதிகள் தப்பிச் சென்றனர்.

அவர்களுக்கு உதவியாக இரு சிறைக்காவலர்கள் மீது குற்றம்சாட்டப்பட்டு யாழ். நீதிமன்றத்தில் 2002 ஆம் ஆண்டு வழக்குத் தாக்கல் செய்யப்பட்டது.

குற்றம் சாட்டப்பட்டவர்களுக்கு எதிராக முன்வைக்கப்பட்ட குற்றச்சாட்டுகள் நிரூபிக்கப்பட வில்லை என நீதிமன்றம் கருதியதால் அவர்களை நீதிமன்ற நீதவான் விடுதலை செய்தார். இதேவேளை குற்றம் சாட்டப்பட்டவர்கள் தொடர்பாக மேலதிக தகவல்கள் பெறப்படுமிடத்து வழக்குத் தாக்கல் செய்ய இந்தத்தீர்ப்புத்தடையாக இருக்காது எனவும் நீதவான் உத்தரவிட்டார்.

# கிரவல் தூசியினால் அசௌகரியம்

(முள்ளியவளை)

முள்ளியவளைப் பகுதியில் உள்ள காட்டு விநாயகர் ஆலய பிரதான வீதி கிரவல் தூசியினால் அப்பகுதி மக்கள் உட்பட வீதிப்பயணிகள் அசௌகரியங்களுக்குள்ளாகி வருகின்றனர்.

மேற்படி வீதியானது வீதி அபிவிருத்தி திணைக்களத்தின் ஆளுகைக்குட்பட்டதாகும். இவ்வீதி காட்டு விநாயகர் ஆலய இவ்வருட பொங்கல் உற்சவத்திற்கு சற்று முன்னராகவே கிரவல் பரவப்பட்டது எனவே மேற்படி வீதிக்கு தார் ஊற்றுவதுடன் வடிகால் அமைப்புக்களையும் செய்யுமாறு அப்பகுதிமக்கள் தெரிவிக்கின்றனர். (ஆ)

# கரும்புலிகள் நாளை முன்னிட்டு மாணவர்கள் சிரமதானம்





(அலுவலக செய்தியாளர்)

கரும்புலிகள் நாளை முன்னிட்டு கிளிநொச்சி குருகுலம் மற்றும் காந்தி இல்ல மாணவர்கள் கிளிநொச்சி மாவட்ட வைத்தியசாலையில் சிரமதானப் பணியினை மேற்கொண்டனர்.

மேற்படி சிரமதானப் பணியானது நேற்றுக்காலை 10.00 மணி தொடக்கம் நண்பகல் ஒரு மணி வரை நடைபெற்றது. இதில் கிளிநொச்சி குருகுலம் மற்றும் காந்தி இல்லம் ஆகியவற்றிலிருந்து 54 மாணவர்களும் ஊழியர்களும் இணைந்து வைத்தியசாலை உள் வளாகம், வெளிப்பகுதி என்பனவற்றை துப்புரவு செய்தனர்.

இந்தத் துப்புரவு பணியினை மேற்கொண்ட மேற்படி இரண்டு இல்ல மாணவர்களுக்கும் வைத்தியசாலை நிர்வாகம் பாராட்டுக்களைத் தெரிவித்துள்ளது. (கு,தீ)

# நேற்று பாண்டியன் குளத்தில் கரும்புலிகளின் ஊர்திப்பவனி

(மல்லாவி)

கரும்புலிகள் நாளை முன்னிட்டு முல்லை மாவட்டஅரசியல்துறையினரின் ஏற்பாட்டில் உருவமைக்கப்பெற்ற கரும்புலிகளின் திருவுருவப் படங்கள் தாங்கிய ஊர்தி பவனி நேற்று பாண்டியன்குளம் பிரதேசத்தில் இடம்பெற்றது.

பாண்டியன் குளப் பிரதேசப்பொறுப்பாளர் இலக்கியனால் பொறுப்பேற்கப்பட்டு பிரதேசங்கள் எங்கும் ஊர்தி செல்கையில் பாடசாலை ஆசிரியர்கள்,மாணவர்கள், வர்த்தக சங்கத்தினர், பொதுமக்கள் உணர்வுபூர்வமாக கரும்புலிகளின் திருவுருவப்படங்களுக்கு மலர்மாலை அணிவித்து அஞ்சலிகள் செலுத்தினர். (24)

# பொதுச்சந்தை முன் வாகனங்கள் நிறுத்தம்

(முள்ளியவளை)

முள்ளியவளைப் பிரதேசத்திற்குட்பட்ட தண்ணீரூற்று பொதுச்சந்தைக்கு முன்பாகவுள்ள பிரதான வீதி ஓரங்களில் பெருமளவான உந்துருளி, ஈருருளி, வாகனங்கள் அதிகளவில் நிறுத்தப்பட்டுள்ளதால் அவ்விடத்தில் விபத்துக்கள் ஏற்படும் அபாய நிலை அவதானிக்க முடிகின்றது.

மேற்படி பகுதியில் பொதுச்சந்தைக்கு முன்பாக வியாபார நிலையங்கள் பெருமளவில் உள்ளன. அவ்வியாபார நிலையங்களுக்கு பொருட்களைக்கொண்டு வரும் வாகனங்கள்,பொருட்கள் ஏற்றவரும் வாகனங்கள் உட்பட பொதுச்சந்தைக்கு வரும் உந்துருளி, ஈருருளி என்பவற்றையும் அவ்வீதி ஓரங்களில் நிறுத்துவதால் அவ்விடம் நெரிசலாக காணப்படுவதுடன், அவ்விடத்தில் சிறுசிறு வீதிவிபத்துக்களும் ஏற்பட்டு வருகின்றமை குறிப்பிடத்தக்கது. (ஆ)

# உப தபாலக கட்டடம் திறந்து வைப்பு

(வட்டக்கச்சி)

கல்மடுநகர் புதிய உபதபாலக கட்டடத் திறப்புவிழா கடந்த வெள்ளிக்கிழமை காலை 9.00 மணியளவில் கிராம அபிவிருத்திச் சங்கத் தலைவர் இ.யோகநாதன் தலைமையில் இடம் பெற்றது.

தேசியக் கொடியினை முன்னை நாள் கல்மடுநகர் கிராம சேவையாளர் தெய்வவேற்பரமநாதன் ஏற்றிவைத்ததோடு, கட்டட பெயர்ப்பலகையினையும் திரைநீக்கம் செய்து வைத்தார்.

கட்டடத்தினை கிளி.மாவட்ட தபாலதிபரும், நிகழ்வின் பிரதம விருந்தினருமான பேரம்பலம் நாடாவை வெட்டித்திறந்து வைத்தார்.

கருத்துரைகளை இராமநாத புரம் கிழக்கு அ.த.க பாடசாலை முதல்வர் புண்ணியமூர்த்தி, கல்மடுநகர் அ.த.க பாடசாலை முதல்வர் இரவீந்திரன், கல் மடுநகர் மனிதவள உத்தியோகத்தர் கந்தசாமி, தெய்வவேற்பரமநாதன் கிளி.மாவட்ட தபாலதிபர் பேரம் பலம் ஆகியோர் நிகழ்த்தினர். (12)

# கலந்துரையாடல்

துணுக்காய் பிரதேச செயலர் பிரிவுக்குட்பட்ட தேறாங்கண்டல் கிராமத்தில் அமைந்த கலைமகள் சிறுவர் பூங்காவுக்கான புதிய கட்டடம் நிர்மாணித்தலுக்கான பொது அமைப்புக்களுக்கான கலந்துரையாடல் கடந்த செவ்வாய்க்கிழமை இரவு 7.30 மணிக்கு கலைமகள் பூங்கா நிர்வாகி செல்வி.ப.ம. பரமநாயகி தலைமையில் இடம் பெற்றது. (24)